விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்தினான்கு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 21 ஞாயிற்றுக்கிழமை (04.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

RAMCO

## அனோமா பொன்சேகாவை கைது செய்ய அரசு திட்டம்?

### ஜனநாயக தேசிய முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகாவின் மனைவியும் எதிர்க்கட்சிகளின் கூட்டணிக் கட்சிஒன்றின் தலைவருமான அனோமா பொன்சேகாவைக் கைது செய்யும் திட்டத்தை அரசு கொண்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஜனநாயக தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

அனோமா பொன்சேகா தனது பாதுகாப்புக்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் *(23 ஆம் பக்கம் பார்க்க)*

## பொன்சேகாவின் விடுதலையைக் கோரி பௌத்த துறவிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகாவை அரசு விடுதலை செய்யும் வரை சாகும் வரை உண்ணா நிலைப் போராட்டத்தை மேற்கொள்வது என பௌத்த துறைவிகளின் ஒரு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அரசினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் பொன்சேகாவை அரசுவிடுதலை செய்யும் வரை சாகும் வரை உண்ணநிலைப் போராட்டத்தை மேற்கொள்வது என பௌத்த துறவிகள் திட்டமிட்டுள்ளனர்.

ஒரு தொகுதி பௌத்த துறவிகள் நேற்று அதற்கான *(23 ஆம் பக்கம் பார்க்க)*

# நாடாளுமன்றத் தேர்தலுக்கான

# அனைத்துப் பணிகளும் பூர்த்தி

## யாழ்ப்பாணத் தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் 7 இலட்சத்து 21 ஆயிரத்து 359 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தூர இடங்களுக்குச் சென்று வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு வாகன வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.கணேஷ் தெரிவித்தார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் பூர்த்தியடைந்துள்ளது.

இதில் பாதுகாப்புப் பணிகளைப் பூரணமாக மேற்கொள்ளப் பொலிஸார் கடமையில் ஈடுபடுவர். அவர்களின் மேலதிக பாதுகாப்புக்காக படையினர் கடமையில் ஈடுபடுவர்.

எனினும் வாக்களிப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் படையினர் கடமையாற்றுவார்கள். யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 7 இலட்சத்து 21 ஆயிரத்து 359 தகுதி பெற்ற வாக்காளர்களில் இதுவரை 4 இலட்சத்து 27 ஆயிரத்து 164 வாக்காளர்கள் அட்டைகள் தபாலகங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டுள் ளன. வாக்காளர் *(23 ஆம் பக்கம் பார்க்க)*

## பங்களாதேஷ் இராணுவம் கிளிநொச்சிக்கு விஜயம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு பங்களாதேஷ் இராணுவப் பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் விஜயம் மேற்கொண்டுள்ளது.

இந்தச் செய்தியினை அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

பங்களாதேஷின் இராணுவக் குழுவுக்கு மேஜர் ஜெனரல் எம்.டி.எதீசன் தலைமை தாங்கியுள்ளார். இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் இராணு *(23 ஆம் பக்கம் பார்க்க)*

## பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சர்வகட்சிக் குழு ஒன்றுகூடும்

### அதன் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நடைபெற்ற முடிந்ததன் பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக உருவாக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஒன்றுகூடலை மீண்டும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சர்வகட்சிக் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளில் மாற்றங்கள் ஏற்பட சாத்தியம் உண்டு. இந்த நிலையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தை நடத்துவது ஏற்புடையதாகும்.

இந்தக் குழு *(23 ஆம் பக்கம் பார்க்க)*

## அமைச்சரின் வாகனம் மோதி விரிவுரையாளர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் முன்னாள் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு வாகனம் மோதியதில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏகாம்பரம் மகேசன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப அமைச்சர் நேற்றுக் காலை தனது தேர்தல் பரப்புரைக்காக மட்டக்களப்பு-திருகோணமலை வீதியில் பயணித்த போது அவருக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டு சென்ற இரா *(24 ஆம் பக்கம் பார்க்க)*






## கோழிக் குஞ்சு விநியோகம்

40 நாட்களில் பூரண நிறையை அடையக் கூடிய BAIRAHA, BAHIRA, PRIMA No.1 புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக் கப்படும். பதிவுகள் முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

நடராஜ் எலக்ரோனிக்ஸ்
கந்தரோடை றோட், சுன்னாகம்.
T.P.: 077 9114440

நிஹோறன் டிரேடர்ஸ்
204, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வரா
பாடசாலைச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.: 071 6529527, 0770481816 (102)


## பரிசளிப்பு வைபவம்

மௌண்ட்லவனியா ஸ்பேஸ் றொக்கெட் விளையாட்டுக்கழகம் நடத்திய ஆண்களிற்கான சைக்கிளோட்டப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் இன்று மாலை 6 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் 20 போட்டியாளர்கள் யாழ். மாவட்ட கழகத்தில் உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-14)

## விரிவுரைகள் இன்று நடைபெறாது

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா மற்றும் பொது நிர்வாகம், பண்பாட்டியல் முதுகலைமாணி விரிவுரைகள் இன்று நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து உயர்குலம் UK Citizen 1970 ஆம் ஆண்டு பிறந்தவர். திருவோண நட்சத்திரம் உடையவர். அரசாங்க துறையில் கடமையாற்றுகின் றார்.

மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார். படித்த தகுந்த மணப் பெண்ணை எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு : 00447404120188 (சி-4972)

## சேவை முகவர்

விற்பனைக்கு

கந்தர்மடம், கச்சேரி நல்லூர் வீதி, கோண்டாவில், உரும்பிராய் பலாலி வீதி, 150 மீற்றர் தூரம் 9 பரப்பு பொற்பதி வீதி, நல்லூர் ஆகிய இடங்களில், காணிகள், வீடு, விற்பனைக்குண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : சுந்தரம்
222 9177, 071 462 4830 (1117)

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை செல்லம்மா



மாவிட்டபுரத்தை நிரந்தரமாகவும், வேரக் கேணியடி நுணாவில் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப் பிள்ளை செல்லம்மா 02.04.2010 வெள்ளிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04.04.2010 பி.ப.3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம்
நுணாவில் மேற்கு
சாவகச்சேரி
021 321 9523 (1116)

தகவல்:-குடும்பத்தவர்கள்
சி.நாகேஸ்வரன் (மகன்)
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி
அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

விடயம்: கேபிள் TV இயக்குவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்

இடம்: JTI இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 04.04.2010 (ஞாயிறு) பி.ப.2.30 மணி

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
யாழ். மாவட்ட கேபிள் TV
இயக்குநர் சங்கம்.

(சி-4970)

## மரண அறிவித்தல்

### திருமதி நடராஜா சரஸ்வதி

### (மலாயன் பென்சனியர்)



வட்டுகிழக்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா சரஸ்வதி (மலாயன் பென்சனியர்) 03.04.2010 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் நடராஜா (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புத்தாயாரும், சச்சிதானந்தத்தின் அன்பு மாமியாரும், கார்த்திகா (யாழ்.பல்கலைக்கழக நூலகம்), ஆரூரன் (SJMS கொழும்பு), நித்தியராணி (கட்டிடத் திணைக்களம்), மயூரன் (அரசாங்க நில அளவையாளர், கெக்கிராவ) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், காலஞ்சென்ற திருமதி செல்லம்மா கனகரட்ணத்தின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.04.2010 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுகிழக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-4973)


## Computer Engineer

அரச புலமைப்பரிசில்

விண்ணப்பிக்க விரும்புவோர் 10-04-2010 இற்கு முன்னர் நேரில் தொடர்புகொள்ளவும்

MCS
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்,
T.P-772395895 Bus Root - 764








# வடமாகாண பல்வைத்தியர் சங்க அங்குரார்ப்பணம் இன்று

## அனைத்து பல்வைத்தியர்களுக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்வைத்தியர் சங்கத்தின் வடமாகாணக் கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வும், விஞ்ஞான அமர்வும் இன்று 4 ஆம் திகதி காலை 8.45 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள கிறீன் கிராஸ் ஹோட்டலில் (Green Grass Hotel) நடைபெறும்.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பல்வைத்திய சேவை) வைத்திய கலாநிதி ஜயசுந்தர பண்டார பிரதம விருந்தினராகவும் பேராதனைப் பல்கலைக் கழக பல்வைத்திய பீடாதிபதி பேராசிரியர் பிரசாத் அமரதுங்க, இலங்கை பல்வைத்தியர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி பர்ஹிம் ஜமில் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இது மே மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் ஆசிய பசுபிக் பல் வைத்தியர்களின் மாநாட்டின் முன்னோடி நிகழ்வாகும்.

இதில் வடமாகாணத்தின் அனைத்து பல் வைத்தியர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ந)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வேப்பந்திடல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

ச. வசந்தரூபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் ஆலய புனருத்தாரணம் தொடர்பான ஆராய்தலும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணை வடமேற்கு கேசாவில் விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி 9 மணிக்கு இரதோற்சவமும் 15 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஓ-6)

# கற்பகம் விற்பனை நிலையத்தை வேலணையில் மீள திறக்க கோரிக்கை

(வேலணை)

வேலணைப் பகுதியில் பனை உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையத்தை (கற்பகம் விற்பனை நிலையம்) மீளவும் திறக்குமாறு இப்பகுதி பனை உற்பத்தியாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

1990 இற்கு முன்பு வேலணை வங்களாவடி சந்தியில் முருகன் கோவிலுக்கு முன்பாக கற்பகம் விற்பனை நிலையமொன்று இயங்கி வந்தது.

இது 1990 இல் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்தது. இதன்பின்பு மீளவும் திறக்கப்படவில்லை.

இவ் விற்பனை நிலையமானது வேலணை பனை, தென்னை வள அபிவிருத்தி சங்கத்தின் ஆளுகையில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பகுதியால் பயணிக்கும் தென்னிலங்கை மக்கள் கற்பக தருவின் உற்பத்திகளை (வேலணையில்) தேடி அலைவதை அவதானிக்கலாம். (ஓ-22)

# இராசி பலன்

04-04-2010
(பங்குனி 21, ஞாயிற்றுக்கிழமை)
சஷ்டி பின்னிரவு 4.35 மணிவரை
கேட்டை முன்னிரவு 10.42 மணிவரை
இராகுகாலம் 4.40-6.10 மணிவரை
சுபநேரம் 9.10-10.40 மணிவரை
கீரிமலை நகுலேஸ்வரராலய தேவி கொடி உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா.

| | |
|---|---|
| மேடம் | தேவையற்ற மனஸ்தாபம், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம், வாகன பயம். |
| இடபம் | தெய்வ சிந்தை, போசன சுகம், வாகன வசதி, காரிய அனுகூலம். |
| மிதுனம் | தொழிலில் ஆர்வம், பகைவர் நேசம், காரிய அனுகூலம், பண வருவாய். |
| கடகம் | புத்திரரால் கவலை, காரிய இடையூறு, தனவிரயம், ஆரோக்கியக்குறைவு. |
| சிங்கம் | பயந்தசுபாவம், புதிய விடயம், ரோக நிலை, அதிக பிரயாசை. |
| கன்னி | சகோதரர் வழி நன்மை, நல்ல செய்தி, தனவருவாய், முயற்சி கைகூடும். |
| துலாம் | அதிக செலவு, வீண்பகை, முயற்சி தாம்தம், பெரியோர் உதவி. |
| விருச்சிகம் | நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, போசன சுகம். |
| தனுசு | காரிய அலைச்சல், பிதாசிந்தை, பணவிரயம், ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | பெருமையடைதல், உறவினர்வருகை, முயற்சி கைகூடும், மன மகிழ்ச்சி. |
| கும்பம் | சுபநிகழ்வு, இனிய செய்தி, முயற்சி தாமதம், அதிகாரம். |
| மீனம் | ஆன்றோர் சந்திப்பு, கட்டுப்பாடு, உணர்ச்சி வசப்படல், பிரயாணம். |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## கனமான மனிதர்கள்

"இப்ப எப்படி இருக்கிறீர்கள்?"

"சௌக்கியமாகத்தான் இருக்கிறேன். இருந்தாலும் என் உடம்புதான் நான் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்கிறது"

"என்ன பண்ணுது"

"நான் எங்கே போனாலும் அதுவும் கூடவே வந்து கொண்டிருக்கிறது."

"தமாஷாப் பேசுறீங்க... இருந்தாலும் கொஞ்சம் முயற்சி பண்ணினா எடையைக் குறைத்து விடலாம்"

"இப்பகூட அது சம்பந்தமாகத் தான் டாக்டரிம் போய் வருகிறேன்."

"உலகத்திலேயே அதிக கனமான மனிதன் யார் தெரியுமா?"

"சொல்லுங்களேன்..."

"அமெரிக்காவைச் சேர்ந்த Robert Earr Hughes என்பவர் தான் உலகின் அதிக கனமான மனிதர். அவருடைய உயரம் ஆறு அடி அரை அங்குலம்."

"அடேயப்பா!"

"அவர் 1962 ஆம் ஆண்டில் பிறந்தார். ஆறு வயதில் அவருடைய எடை 203 பவுண்ட்! 1988 ஜூலை மாதம் 10 ஆம் திகதி அவர் இறந்தார். இறக்கும் போது அவருடைய எடை 1041 பவுண்ட். பிரமாண்டமாக ஒரு பெட்டி தயாரித்து அதற்குள் அவரை வைத்து அடக்கம் செய்தார்களாம். அவர் தான் உலக மனிதர்களிலேயே அதிக எடையுள்ளவர்."

"நாமெல்லாம் அவரோடு போட்டியிட முடியாது! சேர்"

"அதுதான் சொன்னேனே... டாக்டரிடம் போய்விட்டு வருகிறேன் என்று. இனிமேல் அவர் சொற்படி தான் நடக்கப் போகிறேன்."

"அவர் என்ன சொல்கிறார்."

"என்னுடைய சாப்பாட்டில் முக்கால் பங்கு குறைத்து விடச் சொல்லிவிட்டார். இனிமேல் கால்பங்குதான் சாப்பிடப் போகிறேன்."

"அப்படியானால்... இனிமேல் காலையில் எத்தனை இட்லி சாப்பிடுவீங்க?"

"முப்பத்தி அறு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உல்லாசப் பயணிகளை கவரும் வடமராட்சி கிழக்கு மணற்காடு

வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காடு கிராமமானது எழில் கொஞ்சும் கடற்கரையை அண்டியிருக்கும் அழகிய பிரதேசமாகும். இங்கு இயற்கையாகவே மணல் மேடுகள் காணப்படுகின்றன. இத்துடன் சவுக்கு மரம், பனை மரங்கள் நிறைந்த பகுதியாகவும் உள்ளது.

இவ் எழில் மிகு பிரதேசத்தை நாடி மீண்டும் தென்னிலங்கை மக்கள் படையெடுத்து வந்து பார்த்து உல்லாசம் செய்வதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

முன்னைய காலங்களில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் தொகையாக வந்து சென்ற இடமாக இருந்தது. தற்போதைய சமாதான சூழலில் மீளவும் இங்கு படையெடுக்க மக்கள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-22)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 80 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 40 |
| கரட் | 80 | 90 | 90 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 50 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 50 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 300 |
| போஞ்சி | 70 | 80 | 80 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# இந்த மண் எங்களின் சொந்த மண்

## தமிழரின் தாகம் - தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ,தனித்துவமான இறைமை கொண்ட தேசம்



1

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டதின் ஒரு வடிவம் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் பிராந்திய சக்திகளின் முழுமையான அனுசரனையுடன் முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் தமிழ் மக்களின் உரிமைகள் பெறப்படும் வரை எமது உரிமைக்கான பயணம் முற்றுப்பெறப் போவதில்லை.



2

மாறிவரும் சர்வதேச சூழலில் பிராந்திய பூகோள போட்டி காரணமாக இலங்கை அரசுக்கும் மேற்குலகத்துக்கும் இடையேயான இராஜதந்திர இடைவெளி அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேற்குலகம் இலங்கை அரசின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கையை கையில் எடுத்துள்ளது.

இந்த நிலையில் அடிப்படைத் தமிழ் தேசியக் கொள்கைகளில் நாம் உறுதியாக இருந்தால் எமது சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமையுள்ள தேசம் என்பன அங்கீகரிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகரித்துவருகின்றது.



3

இந்தியா ஒருபோதும் இலங்கை அரசின் விருப்புக்களுக்கு மாறாக தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை பூர்த்தி செய்யும் தீர்வு விடயத்தை முன்னெடுக்க அனுமதிக்கப்போவதில்லை என்பதனைத் நன்றாகத் தெரிந்திருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் பிராந்திய நலனைத் திருப்திப் படுத்தும் வகையில் தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டு அரைகுறையான தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.



4

தமிழ்த் தேசியக் கொள்கைகளை கைவிட்டு தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்தை மக்களுக்குத் தெரியாமல் மறைத்துவைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் தமிழ்த் தேசியக் கொள்கைகளை கைவிடவில்லையென தேர்தல் மேடைகளில் கூறிவருகின்றது. இது தேர்தலுக்காக பேசப்படுகின்ற வார்த்தைகளே அன்றி தேர்தலின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியக் கொள்கைகளை முன் கொண்டு செல்லப்போவதில்லை.



5

தேர்தலின் பின்னர் மீண்டும் தான் தயாரித்துள்ள அரைகுறையான தீர்வுத்திட்டத்தையே கூட்டமைப்பு முன்னெடுக்க உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான இந்தச் செயற்பாடுகள் கூட்டமைப்பில் தற்போது உள்வாங்கப்பட்டுள்ள புதிய வேட்பாளர்களுக்கும் கூட்டமைப்பிற்கு சார்பாகச் செயற்பட்டு வருகின்ற பத்திரிகையாளர்களுக்கும் நன்கு தெரிந்திருந்தும் கொள்கைகளைக் கைவிட்டு தமது தேர்தல் வெற்றியை மட்டும் நோக்காகக் கொண்டு கூட்டமைப்பின் துரோகச் செயற்பாடுகளை மூடிமறைத்து வருகின்றனர்.



6

கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மூவர் தமிழ்த் தேசியக் கொள்கைகளில் உறுதியாக இருக்கின்றனர் என்று தெளிவாகத் தெரிந்தும் அவர்கள் விலை போனவர்கள் எனவும் அரசுடன் ஒப்பந்தம் செய்தவர்கள் எனவும் உண்மைக்குமாறான பொய்யான செய்திகளை தமது பத்திரிகையில் பிரசுரித்து வருகின்றமை தமிழ்த் தேசியத்தைச் திட்டமிட்டுச் சிதைக்கின்ற ஒரு செயற்பாடு.

**தமிழ்த்**

**தேசியத்தை**

**பாதுகாக்க**

**எம்மோடு**

**அணி திரளுங்கள்.**



7

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலுக்காக பேசுகின்ற வார்த்தைகளை நம்பி வாக்களித்து தமிழ்த் தேசியத்தை படுகுழியில் தள்ளும் நாசகார முயற்சிக்குத் துணைபோகாதீர்கள்.



8

முள்ளிவாய்க்கால் பேர் அழிவுக்கப் முன்னரும் பின்னரும் தமிழ்த் தேசியக் கொள்கைகளில் உறுதியாக நின்று ஒரு கூட்டாக தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியில் இணைந்து சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு உங்கள் வாக்குகளை அளித்து தமிழ்த் தேசியத்தை சீரழிக்க இடம் அழிக்கமாட்டோம் என்பதனை உங்கள் வாக்குகளால் நிருபியுங்கள்.

**பாராளுமன்றப் பொது தேர்தல்**

**08. 04. 2010**



9

## அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

## (தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி)



10

(சி-5060)



11







12

# உல்லாசப் பயணிகளுக்கு ஏற்ற 10 நாடுகளில் இலங்கையும் தெரிவு

(கொழும்பு)

உலகில் உல்லாசப் பயணிகள் தொடர்பாக ஜேர்மன் மொழியில் வெளியாகும் சஞ்சிகையொன்றில் சர்வதேச ரீதியாக உல்லாசப் பயணிகளுக்கு ஏற்ற நாடாக 10 நாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

ஜேர்மன் மொழியிலான சஞ்சிகையொன்றினால் இனங்காணப்பட்ட இப் பத்து நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்படுகின்றது.

பல்கேரியா முதலாவது இடத்தைப் பெற்றுள்ள அதேவேளை இலங்கை, மலேசியா, தாய்லாந்து, இந்தியா, மெக்சிக்கோ, குரோசியா, துருக்கி, எகிப்து, ஹங்கேரி ஆகிய நாடுகளும் தெரிவாகியுள்ளன.

இந்த ஆண்டு முதல் சர்வதேச ரீதியாக உல்லாசப் பயணிகளின் நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பல நாடுகளிடம் இடம்பெற்று வந்த உள்நாட்டு புத்தகங்கள் கணிசமான அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையும் இதற்கு பிரதான காரணமாக அமைகின்றது என்று அந்த சஞ்சிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-9)

# வர்ண இரவு-கலாசார விழா கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கலாசார திணைக்களமும் விளையாட்டுத் திணைக்களமும் இணைந்து நடத்தும் வர்ண இரவு கலாசார நிகழ்வு நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகரணத்தைச் சேர்ந்த 30 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர். இதில் யாழ் மாவட்டதைச் சேர்ந்த 16 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 2 பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 4 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 பேரும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேரும் அடங்குவர்.

நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளோர் பெயர் விபரம் வருமாறு,

**யாழ்மாவட்டம்**

பேராசிரியர். நடராஜசுந்தரம், கே. யதுகுலசிங்கம், டாக்டர் .என்.எதிர்வீரசிங்கம் > எஸ்.மரியதாஸ், கே.ஏகாம்பரம், அமரர் ஏ. எஸ். குணரட்ணம், கே.டபிள்யூ. விமலராஜன், அமரர் றொகான் ராஜசிங்கம், வி.கே. சண்முகலிங்கம், டி.எம். வேதாபரணம், ரி. அருணகிரிராஜா, கே.குமாரசாமி, பி. பஞ்சலிங்கம், அமரர் ரி.பி. பத்மநாதன் > ஆர். இராஜேந்திரம், எஸ். அந்தோனிப்பிள்ளை.

**முல்லைத்தீவு மாவட்டம்**

எஸ். தவராசா, திருமதி ஏ. ஸ்ரீ ஜெயானந்தபவன் .

**மன்னார் மாவட்டம்**

ஏ. அன்ரன் தங்கேஸ்வரன், எம். ஜீவரட்ணம், எஸ்.ஜே.ஏ. குரூஸ், எஸ். பாலசிங்கம்.

**கிளிநொச்சி மாவட்டம்**

அமரர் ரி.கணேசலிங்கம், கே. புவனேந்திரராஜா, திருமதி எஸ். சூரியமூர்த்தி.

**வவுனியா மாவட்டம்**

அமரர் டி.எம். பொன்கலன், அமரர் எம். முருகதாஸ், எம். பாலநாதன், எஸ். எட்மன் ஜெயசீலன், ஜே.ஏ.டி.எல். ஜயசேகர ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ஓ)


## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010


6

சி.கா.செந்திவேல்
முதன்மை வேட்பாளர்


3

கா.கதிர்காமநாதன்
(செல்வம்)


8

T.V.கிருஷ்ணசாமி
(ஓய்வு பெற்ற உள்ளூராட்சி பிராந்திய உதவி ஆணையாளர்,)

அன்பார்ந்த மக்களே!

- தமிழ் மக்களை அழிவுப்பாதையில் அழைத்துச் சென்ற அனைத்துத் தமிழ் தலைமைகளையும். நிராகரியுங்கள்.
- பேரினவாத ஆளும் வர்க்கக் கட்சிகளிடம் மண்டியிட்டு நிற்கும் தலைமைகளை நிராகரியுங்கள்.
- மக்களுக்கான மாற்று அரசியலைப் புதிய பாதையில் முன்னெடுக்க வரலாற்றுப் பட்டறிவோடு

(1002)

**கேத்தல் சின்னத்திற்கு வாக்களியுங்கள்!**

புதிய ஜனநாயக கட்சியின்
சுயேட்சைக்குழு-06

X


# இறுதிப் போரில் உயிரிழந்த புலிகளில் 25 பேர் மலையகத்தை சேர்ந்தவர்கள்

(கொழும்பு)

இறுதிக் கட்டப் போரின் போது உயிரிழ்ந்த 25 சிரேஷ்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் கண்டி மற்றும் மாத் தளைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என லக்பிம தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களின் பின்னர் இது குறித்த விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவி க்கப்படுகிறது.

இராணுவத் தாக்குதலில் உயிரிழந்த குறித்த நபர்கள் புலிகளின் சிரேஷ்ட பதவிகளை வகித்தவர்கள் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் குறித்த நபர்களின் ஆதரவுடன் புலி உறுப்பினர்கள் செயற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்களுடன் தொடர்புகளைப் பேணி யவர்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் நடத்தப்படவுள்ளது. (ஓ-6)

# பாதை நெருக்கடியால் பயணிகள் விசனம்

சித்தன்கேணி சந்திப் பகுதியில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்துள்ள நடைபாதை வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கையை ஒருபுறத்திலும், மறுபுறத்தில் சிறீலங்கன் ரெலிகொம் நிறுவனம் தமது இணைப்பு வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதனாலும் அப் பிரதான வீதியால் பயணிப்போர் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக அப்பகுதியில் பயணம் செய்யும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஓ-17)


தமிழரசுக் கட்சி

தமிழரிடையே
நல்ல அரசியல்
கலாசாரத்தை
வளர்த்தெடுப்போம்.



பேராசிரியர்
இரா.சிவசந்திரன்

X 5



சுரேஷ் க. பிறேமச்சந்திரன்



நிலையானதும்
வலுவானதுமான
தீர்வை நோக்கி..


X
3

(இ-5041)

இலங்கை தமிழரசுக் கட்சி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

# மாபெரும் பொதுக் கூட்டமும் இன்னிசை கானமும்




இடம்:-
யாழ்.இந்துக் கல்லூரி மைதானம்
காலம்:-
04.04.2010 ஞாயிற்றுக்கிழமை
மாலை 06.00 மணி

9

**பிரதம விருந்தினர்**
கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்)

**பொதுக் கூட்ட அமைப்பாளர்**
அம்பலம் இரவீந்திரதாசன் (J.P)
(நல்லூர் பிரதேச அமைப்பாளர்)





**கௌரவ விருந்தினர்கள்**
முருகேசு சந்திரகுமார் (அசோக்)
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
சில்வேஸ்திரி அலன்ரின் (S.A. உதயன் )
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

**சிறப்பு விருந்தினர்**
திருமதி பற்குணராசா யோகேஸ்வரி
(முதல்வர், மாநகர சபை - யாழ்ப்பாணம்)

8 12

**நிகழ்ச்சி நிரல்**

- வரவேற்பு நிகழ்ச்சி
- தலைமை உரை
- சிறப்புப் பேச்சாளர்கள் உரை
- பிரதம விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர்கள் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- நன்றி உரை


அருணா இசைக் குழுவினர் வழங்கும் இன்னிசை கானங்கள்

அனைத்து மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-5053)

# பொதுத் தேர்தல் -2010

முல்லைத்தீவு தேர்தல் தொகுதி வாக்காளப் பெருமக்களே!



- இறந்தகாலத்தை மூடிவைப்போம்!
- நிகழ்காலத்தை புரிந்து கொள்வோம்!
- எதிர்காலத்தை மகிழ்வாக்குவோம்!
- வாழ்வும் வளமும் எமதாக்க

வெற்றிலைச் சின்னத்தைப் பலமாக்குவோம்!

## யாழ். நகரில் பரவலாக வாழும் முல்லைத்தீவு மக்கள்

தேர்தலில் வாக்களிப்பதற்காக முல்லைத்தீவு சென்று வருவதற்கான இலவச ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு:
மு.தியாகராசா (ஓய்வு பெற்ற அதிபர்)
379 A, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 9955546, 021 4902124

**சதாசிவம் கனகரத்தினம்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், வன்னி)

X 8

எங்கள் பிரச்சினைகள் தீர
இடம்பெயர்ந்த மக்கள்
சொந்த இடங்களில் வாழ
இழந்த செல்வத்தை
திரும்பப் பெற
மகிந்தவின் கரத்தை பலப்படுத்துவோம்.

(சி-5050)

அன்றும் இன்றும் என்றும் உங்கள் சேவையில் சதாசிவம் கனகரத்தினம்
077 0742828, 024 222 4496



இராணுவ முற்றுகைக்குள்
இயல்பு வாழ்க்கை சாத்தியமேயில்லை...
முட்கம்பிவேலி முகாம்களுள்
சமாதானக்காற்று வரப்போவதில்லை....
உயர் பாதுகாப்பு வலயச்சூழலில்
சுதந்திரமாக சுவாசிக்க முடியுமா?
அமைதிக்கு உத்தரவாத மளிக்கு
ஆயுதம் தாங்கிய அராஜகக் குழுக்களா?
பேரினவாதத்தின் கால் பிடித்து நிற்போர்
தமிழர் உரிமைக்கு உத்தரவாதமளிப்பதா?
சிந்திக்க வேண்டியவர்கள்

**தமிழ் மக்களே!**
**ஆட்சி மாற்றம் இன்றேல்**
**அவமானமே தொடரும்...!**
**ஒவ்வொரு வாக்கும்**
**உங்களைக் காக்கும்!**

(சி-5070)

X 1

மகேஸ்வரன் வழியில் மக்களுக்காக
சிந்திக்கும்
துவாரகேஸ்வரனே உங்கள் துணைவன்!

மக்கள் துயர் துடைக்க மீண்டும் ஒரு தியாகராஜா மகேஸ்வரன்...

# தியாகராஜா துவாரகேஸ்வரன்

# அன்புள்ளங்களுக்கு என் இறுதி வேண்டுகோள்



ஆண்டுகள் பல ஓடின. நம் மக்களை சொல்லொணாத்துன்பத்தில் ஆழ்த்தி விட்டு அதிலும் பன்மடங்கு மேலான நரக வாழ்க்கையில் கடந்த ஓரண்டுக்கு மேல் பயங்கரமான சூழ்நிலையில் பயத்துடனும் , பீதியுடனும் வாழ்ந்தார்கள் நம் மக்கள்.

உற்றார் , உறவினர் ,நண்பர்கள், குழந்தைகள் என பல்வேறு உறவுகளை இழந்து ,நித்திய கண்ணீருடன் வாழ்கின்றனர். கொடூரமான முறையில் துடிக்கத் துடிக்க நம் உறவுகளின் உயிர்கள் பிரிவதைக் கண்டு பெரும் பீதியுடன் வாழும் மக்கள் கேட்கின்றார்கள். நாம் கெட்ட கேட்டுக்கு நமக்கு ஒரு தேர்தல் அவசியமா என ?

நீங்கள் கேட்கும் கேள்வி நியாயமானதே! எதிர் காலம் கடந்த காலத்தை விட மோசமானதே . 1994ஆம் ஆண்டு யாழ். தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரையும் ஒரு குழுவிற்கு கொடுத்தும் , அந்தக்குழு மட்டும் அனுபவித்ததே அன்றி நம் மக்களின் பிரச்சினைகள் மேலும் வளர்ந்தன.

2004 ஆம் ஆண்டு 22 உறுப்பினர்களை இன்னும் ஒரு குழுவிற்கு கொடுத்தீர்கள். ஆறு ஆண்டுகள் தொடர்ந்து வன்முறையை அக்குழு வளர்த்ததேயன்றி ஒரு நாளெனும் வன்முறைகளையோ, உங்கள் பிள்ளைகள் பிடித்துச் செல்லப் பட்டு போர்க்களத்தில் பலிகொடுக்கப்பட்டதையோ , உங்கள் உரிமைகள் அத்தனையும் பறிக்கப்பட்டு , சர்வாதிகார ஆட்சிக்குள் நீங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதையோ ஒரு நாள்தன்னும் ஆட்சேபிக்கவில்லை.

அதற்கு மாறாக மீண்டும் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு உங்களிடம் வாக்கு கேட்க வருபவர்களிடம் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் பல உண்டு. போதிக்க வேண்டியவையும் பல உண்டு.

என்னை பற்றியோ நான் கடந்த ஆறு ஆண்டுகள் என்ன செய்தேன் என்பது பற்றியோ நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. பயத்தின் காரணமாகவோ வேறு ஏதாவது காரணத்தினாலோ என் நடவடிக்கைகள் இருட்டடிப்பு செய்யப்பட்டன. அதற்காக அரசாக இருந்தாலும் சரி . வேறு யாராக இருந்தாலும் சரி செய்யும் செயல்கள் குற்றமானவையாகில் துணிச்சலுடன் அதை எடுத்துக்கூறியவனும் கண்டித்தவனும் நானே.

நான் எழுதி பிரசுரமாகிய பல கடிதங்களில் சிலவற்றை தேர்ந்தெடுத்து இடம் போதாமையால் அவற்றின் சில பகுதிகளை மட்டும் இங்கே தந்துள்ளேன்.

பல்கலைக்கழக மாணவர்கள் என்னை மன்னிப்பீர்களாக , கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் உங்களின் முன்னோடிகள் சிலர் ஓர் ஆயுதக்குழுவின் மிரட்டலுக்கு அஞ்சி பொதுமக்களின் அபிலாசைகளுக்கு மாறாக ஒரு குழுவில் இருந்து 22 பேரை அனுப்பி வன்முறையை வளர்த்து மக்கள் உரிமைகளை பறிக்க உதவினர். இக் குற்றத்தையும் தட்டிக்கேட்காமல் மக்களை அழிவுப் பாதைக்கு கொண்டு சென்றீர்கள் விளைவு நம் மக்கள் ஓட்டாண்டியாகி , பல்லாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிகொடுத்து உற்றார் , உறவினர்களை இழந்து இன்றும் தவிப்புடன் வாழ்கின்றனர். உங்களுக்கு முன்பு மாணவர்களாக இருந்த ஒரு சிலரின் தப்பாலேயே இன்று இத்தனை கொடுமைகளை மக்கள் அனுபவிக்க நேர்ந்தது. மக்கள் கணிசமான ஒரு பகுதியினரை பலி கொடுத்தனர். இன்று மீண்டும் அதேபோன்ற நிலை உருவாகிவருதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதே மாணவர்கள் அதே தலைவர்கள் அதே நிலைப்பாடு போன்ற நிலை உருவாகுமேயானால் ஆண்டவன் தான் எஞ்சியுள்ள தம் மக்களை காப்பாற்ற வேண்டும்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

**தமிழ் மக்களின் பிரச்சினையை துணிச்சலுடன் உலகறியச் செய்த மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.**

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X 1

(சு/5055)




யா/ நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வில் மாணவ தலைவர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பொ. ஐங்கரநேசன், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ தலைவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## புனர்வாழ்வு நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுவோருக்கென இரு பாடசாலைகள் அமைக்க தீர்மானம்

புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றாதவர்களுக்கென பிரத்தியேகமாக இரண்டு பாடசாலைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக புனர்வாழ்வுக்குப் பொறுப்பான ஆணையாளர் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைகளுக்கு தோற்றாத புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களை பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதில் வயது ஒரு தடையாக இருப்பதனாலேயே இவர்களுக்கென பிரத்தியேகமாக இரண்டு பாடசாலைகள் நிறுவ தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் கல்வியமைச்சுடன் இணைந்து இப்பாடசாலைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆண்கள், பெண்களுக்கென வேறு வேறாக அமைக்கப்படும் பாடசாலைகளில் புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றாத்வர்களுக்கென விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு பின்னர் பரீட்சைகள் நடத்தப்படுமெனவும் ஆணையாளர் குறிப்பிட்டார். (ஓ-6)

## கிராம அலுவலர்களுக்கு தேர்தல் கால கொடுப்பனவு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களை அமைக்கும் கிராம அலுவலர்களுக்கான கொடுப்பனவு விபரங்களை தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையத்தில் ஒற்றை வரிசை அமைக்க 60 ரூபாவும், இரட்டை வரிசைகள் அமைக்க 125 ரூபாவும், நிலையத்திற்கு வெளியிலிருந்து நீர் கொண்டு வந்து வழங்கினால் 300 ரூபாவும், மின்சார ஒளி வழங்க மேலதிகச் செலவுகள் செய்தால் 750 ரூபாவும் வழங்கப்படும்.

வாக்கெடுப்பு நிலைய பணிக்கான ஆயிரத்து 250 ரூபா விதமான கொடுப்பனவு வழங்கப்படும்.

ஒரே இடத்தில் வேறு வாக்களிப்பு நிலைய பணிபுரிந்தால் நிலையமொன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## விகிதாசார தேர்தல் முறையில் விரைவில் மாற்றம் கொண்டுவரப்படும்

### அமைச்சர் டளஸ் அழகப்பெரும

(கொழும்பு)

2010 பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் பெரும்பான்மை பலத்துடன் அமைக்கப்படும் பாராளுமன்றத்தில் தேர்தல் முறையை மாற்றும் நடவடிக்கைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் இதனை ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளதுடன் தீர்மானமும் செய்து கொண்டுள்ளன.

விருப்பு வாக்குகள் முறையிலான விகிதாசார தேர்தல் முறையின் கீழ் நடத்தப்படும் இறுதியான தேர்தல் இதுவாகத் தான் இருக்கப் போகிறது என அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாட்டிற்கு பெரும் கேடாக இருக்கின்ற இந்த விருப்பு வாக்கு தேர்தல் முறையை மாற்றித் தாருங்கள் என்றும் மக்கள் உங்களிடம் கேட்கின்றனர்.

தொகுதிவாரியான தேர்தல் முறையில் நிச்சயமாக ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு உறுப்பினர் இருப்பார். அவர் அந்த தொகுதிக்கு பொறுப்பு கூறக்கூடியவராக பொறுப்பு கூற வேண்டியவராக இருப்பார். குறிப்பாக அவர் கண்ணாடி வீட்டிற்குள் இருப்பவர் போன்று இருக்க வேண்டியவராக இருப்பார்.

எமது நாட்டிற்கு ஒரு தொல்லையாக இருந்த பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது. அதே போன்று மிகப் பயங்கர விளைவுகளை தந்து கொண்டிருக்கும் விகிதாசார தேர்தல் முறையிலும் விரைவில் மாற்றம் கொண்டு வரப்படும் என்றார்.

தேர்தல் மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவரான அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் முதற்கட்டமாக தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வரப்படும் என்பதை உறுதி செய்தார். (ஓ-6)

## ஊர்காவற்றுறையில் கடற்றொழில் பயிற்சி நெறி

(வேலணை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வலை முடிதல் (வலை பின்னுதல், வலைதிருத்துதல்) கடலுணவு பதனிடல் ஆகிய இரு கடற்றொழில் சார்பான பயிற்சி நெறிகள் நாளையும் நாளை மறுநாளும் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியானது யாழ். மாவட்ட அரச அதிபரின் ஏற்பாட்டில் ''சைல்பண்ட்'' என்ற நிறுவனத்தினரின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியினரால் நடாத்தப்படவுள்ளது.

எனவே இப்பயிற்சி நெறியில் ஆர்வமுள்ள கடற்றொழில் சமூகத்தினர் பங்குபற்றி பயன்பெறுமாறு உதவிப் பணிப்பாளர் இ. செபஸ்தியாம்பிள்ளை கேட்டுக் கொள்கின்றார்.

இப்பயிற்சி நெறியானது இப்பகுதியில் முன்பும் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-22)


## ஒரு புதிய அரசியற் பண்பாடு நோக்கி.

பத்மினி சிதம்பரநாதன் கூட்டமைப்பிலிருந்து தானாக விலகியதாக ஒரு கதை பரப்பப்படுகிறது. அந்தக் கதை பொய். பச்சைப்பொய். அப்பட்டமான பொய். பண்பாட்டுச் செழுமைமிக்கத் தமிழ்ச் சமூகம் பொய்களுக்குள் புதைந்துவிடக்கூடாது

நாம் பணி செய்வோம்.
**உண்மையும்.** TRUTH &
**ஒற்றுமையும்** UNITY
நம் சமூகத்தில் மலரட்டும்.

உண்மையான தொடர்பாடலுக்கேற்ற பண்பாட்டு நிலையங்களை -ஆலயங்கள் போன்ற - உருவாக்கி உண்மையான தொடர்பாடலால் சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவோம்.

ஒற்றுமையின் பலத்தால் ..

- கிராமங்களில் முன்னேற்றம்.
- பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம்.
- பெண்களின் வாழ்வில் முன்னேற்றம்.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் குறிப்பாகப் பெண்கள், பிள்ளைகளின் வாழ்க்கையில் மலர்ச்சி.
- தமிழ்ச்சமூகத்திற்கு விடுதலை காண மக்கள் மத்தியிலும் பாராளுமன்றத்திலும் உழைப்போம்.

தமிழர் தலைவிதியை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காலகட்டத்தில் நாம் நிற்கிறோம

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

நம்புங்கள்! தமிழர் வாழ்வைச் சிறப்பானதாக ஆக்குவோம்.

இணையத் தேடலிற்கு
http://spathmini.com
(இவரது பணிகள் பற்றிய படங்களைப் பார்வையிடலாம்)

2010 ஏப்ரல் 08
பாராளுமன்றத் தேர்தலில்



பத்மினி சிதம்பரநாதன்
B.A(Hons),P.G.Dip.in.ed

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
X 5

(சி-5051)


## படையினருக்கு எதிராக வீடியோ காட்சிகளை வெளியிட்ட நபர்கள் தொடர்பில் விசாரணை

### புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு எதிரான வகையில் வீடியோ காட்சிகளை வெளியிட்ட நபர்கள் தொடர்பில் இலங்கை புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரண்டு தொலைக்காட்சி ஊடகவியலாளர்களே இவ்வாறு படையினருக்கு எதிராக வீடியோக் காட்சிகளை வெளியிட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

குறித்த இரண்டு ஊடகவியலாளர்களையும் இலங்கைக்கு அழைத்து வந்தது யார் மற்றும் அவர்களுக்கு உதவிகளை வழங்கியது யார் என்பது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரான்ஸ் நாட்டு ஊடகவியலா ளர்கள் இராணுவத்தின் அனுமதியின்றி வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்துள்ளனர் எனவும் குறித்த ஊடகவியலா ளர்களின் இலங்கை விஜயம் குறித்து வெளி விவகார அமைச்சிற்கும் அறிவிக்கப்பட வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் தமிழ் பொதுமக்களை விரட்டியடிப்பதாக போலியான செய்திகளை பிரான்ஸ் ஊடகம் வெளியிட்டிருந்ததென திவயின குறிப்பிட் டுள்ளது. (6)

## கண்டி, நுவரெலியா மாவட்டங்களில்

# விருப்புவாக்குகளுக்காக பணத்தை வாரியிறைக்கும் வேட்பாளர்கள்

தேர்தல் நெருங்கி வரும் நிலையில் கண்டி, நுவரெலியா தேர்தல் மாவட்டங்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் சிலர் கூடிய விருப்பு வாக்குகளை பெறும் நோக்கில் பிரசாரப் பணிகளுக்காக சிலரை அமர்த்தி நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வரையில் பணம் வழங்கி வருகின்றனர்.

இதன் காரணமாக தோட்டத்தொழிலாளர்கள் பலர் தங்கள் தொழிலை விட்டு அன்றாடம் வேட்பாளர்கள் பின்னால் பிரசாரப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாள் ஒன்றுக்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்கு 80 ரூபாவும் பதாகைகள், கொடிகள் கட்டுவதற்கு ஆயிரம் ரூபாவும் மற்றும் வாகனங்களில் கூட்டமாக செல்வதற்கு ஒலிபெருக்கியில் அறிவிப்பதற்கும் ஆயிரம் ரூபாவோடு தொப்பியும், ரீசேட்டும் வழங்கப்பட்டு வருகின்றது.

இது தவிர, கூட்டம் கூட்டமாக வாகனங்கள் செல்வதற்கும், முச்சக்கரவண்டிகள் ஊர்வலமாக காலையில் இருந்து மாலை வரை செல்வதற்கும் விசேட கட்டணங்கள் வழங்கப்படுகின்றன.

வான் ஒன்றுக்கு எரிபொருள் நிரப்ப 5 ஆயிரம் ரூபாவும் முச்சக்கரவண்டிக்கு எரிபொருள் நிரப்ப ஆயிரம் 500 ரூபாவும் வழங்கப் படுகின்றன.

அதேவேளை தனியார்பஸ்வண்டிகளுக்கு அதன் இருக்கைகளுக்கேற்ப கட்டணம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் கண்டி மாவட்டத்தில்வேட்பாளர்களிடையே கடும் போட்டி நிலவுவதால் போட்டி போட்டு அலுவலகம் அமைப்பதிலும் சுவரொட்டிகளையும் ஸ்ரிக்கர்ஒட்டுவதில்வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (6)


CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

புதிய பிரிவுகள் ஆரம்பம்
April 02, 03, 05



வெள்ளிவிழா

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

- Office Application
- Web Design & development
- Adv. Digital Pre-Press
- Digital Video Production
- Adv. Java Programming
- Tally Accounting Training
- Hardware & Networking
- Computer Graphic Design

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088


## இதுவரை தேர்தலுடன் தொடர்புடைய

# 300 வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)

தேர்தலுடன் தொடர்புடைய 300 வன்முறைச் சம்பவங்கள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் பிரசாரப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் கடந்த முதலாம் திகதி வரை 173 பாரிய வன்முறைச் சம்பவங்களும் 127 சிறிய வன்முறைச் சம்பவங்களும், துப் பாக்கிகளை பயன்படுத்திய 41 சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

பாரதூரமான சம்பவங்களில் 66 சம்பவங்கள் தாக்குதல் சம்பவங்கள் எனவும் 44 சம்பவங்கள் அரச வளங்களை முறைகேடாக பயன்படுத்தியமை குறித்தானது எனவும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் குறிப்பிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிராக 187 முறைப்பாடுகளும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிராக 15 முறைப்பாடுகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு எதிராக 19 முறைப்பாடுகளும் ஜனநாயக தேசியக் கூட்டணிக்கு எதிராக ஒரு முறைப்பாடு கிடைத்துள்ளன. நுவரெலியா, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் வன்னி மாவட்டங்களிலேயே அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. (ஓ-6)

## கலை ,கலாசார பெருவிழா

சித்திரைப்புத்தாண்டை ஒட்டி ஹற்றனில் சர்வதேச இணைய வானொலி வாரணம் எவ்.எம். ஊடக அனுசரணையில் முத்தமிழ் கலை ,கலாசார பெருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இப்பெருவிழாவில் சிறப்புக் கலை நிகழ்வுகள் இசை மற்றும் இலக்கிய வார்ப்புகள் இடம் பெறவுள்ளன. இந்நிகழ்வில் சர்வதேச இணைய வானொலி வாரணம் எவ்.எம். இன் யாழ்ப்பாண மற்றும் கொழும்பு அறிவிப்பா ளர்கள் ,பயிற்சி அறிவிப்பாளர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர். (ஓ)

# சிங்கள மொழியைக் கற்பிக்க யாழில் மொழிப்பயிற்சி நிலையம்

## அரசு திட்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாண குடாநாட்டில் மொழிப்பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கு முகாமைத்துவ பயிற்சி நிலையம் உத்தேசித்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுத்துறை ஊழியர்களுக்கு சிங்கள மொழியை கற்பிப்பதற்காக இந்த மொழிப் பயிற்சி நிலையம் நிறுவப்படவுள்ளது.

ஏற்கனவே மொழிப்பயிற்சி நடவடிக்கைகளை உத்தியோகபூர்வ மொழித் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி , மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு சிங்கள மொழி பயிற்று விப்பாளர்கள் தேவை எனவும் அதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுவரு வதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

பகுதி நேர அடிப்படையில் பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)


# நாடாளுமன்றத் தேர்தல் - 2010

எங்கள் தெரிவு முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா



தமிழினத்தின் விடிவுக்கும், தமிழர் தேசத்தின் விடுதலைக்கும்
40 ஆண்டுகளுக்கும் மேலாக ஓயாது, தலை சாயாது, களம் பல
புகுந்து, சிங்களச் சிறை பல சென்று, சித்திரவதைகளையும்
தாங்கி, மரணத்தையும் வென்ற உண்மை, நேர்மை, அர்ப்
பணிப்பு, தியாகம் நிறைந்த பாதையில் வந்த ஒரே தலைமகன்

மாவை சேனாதிராசா

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு எதிரே
புள்ளடியிட்டு மாவை சேனாதிராசாவின் இல 8 க்கும் மேலே
புள்ளடியிட்டு வெற்றி படைப்போம் என எழுவோம்.
எங்கள் வாக்குகள் மாவைக்கே!

X 8

காங்கேசன்துறைத் தொகுதி மக்கள்

(சி-5048)

திரை விமர்சனம்

# அங்காடித் தெரு

தமிழ் சினிமா இதுவரை பயணிக்காத அங்காடித் தெருவின் கதையிது. வேகமாகப் பொருட்கள் வாங்கிக் கொண்டு புறப்படும்போது, அதை விற்பவரை ஒரு பொருளாகக் கூட பார்க்கத் தவறியிருப்போம். அவர்களின் வலி மிகுந்த வாழ்க்கையை யதார்த்தமாகச் சொல்கிறது படம்.

சென்னையில் புதிதாக திறக்கும் துணி, பாத்திர மெகா கடைக்கு தென்மாவட்ட இளம் வாலிபர்கள் மற்றும் பெண்களை வேலைக்கு எடுக்கிறார்கள். அந்த வாலிபர்களில் கதாநாயகன் மகேஷும் ஒருவர். அந்தக் கடையில் வேலை பார்க்கும் அஞ்சலியுடன் மோதலில் ஆரம்பிக்கிறது அவரது சந்திப்பு.

இருவருக்கும் வாழ்க்கை தந்த வலி, மோதலை மறக்கச் செய்து, நட்பு வட்டத்துக்குள் நுழைய வைக்கிறது. அது காதலாகிறது. இதற்கிடையே அந்தக்கடையிலேயே பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும் ஒரு காதல் நசுக்கப்படுகிறது. மகேஷும் அஞ்சலியும் பிரிந்து போகிறார்கள். இவர்களின் காதல், கடை உரிமையாளருக்கு தெரியவரும்போது, திருட்டு பட்டம் கட்டி மகேஷை பொலிஸில் ஒப்படைக்கிறார் கள். அதன்பின் நெஞ்சை உலுக்கும் இறுதிக் கட்டத்தை அடைகிறது படம்.



இப்படியொரு கதைக் களத்தை யோசித்த இயக்குநர் வசந்தபாலனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அதை திரையில் நேர்மையாகக் காட்டியதற்காக அவரைக் கொண்டாடலாம். இளமையில் வறுமையை சந்திக்கும் கிராமத்துக் கூட்டம் சென்னைக்கு வேலைக்கு வருவது, அங்கு சிறையாகிப் போகிற அவர்களின் வாழ்க்கை, தாமதமாக வந்தால் ஒவ்வொரு நிமிடத்துக்கு சம்பளத்தில் ஒரு ரூபாய் இழப்போம் என்ற பயம், மாட்டு கொட்டகை போன்ற மெஸ், குருவிக் கூடு போன்ற இருப்பிடம், குடோனிலிருந்து ஏசி ஹோலுக்கு மாறுதலாகும்போது அவர் களின் சந்தோஷம், சிறுதவறுக்கு அந்த இருட்டறையில் படும் அவஸ்தை என அவர்களின் சோக வாழ்க்கையைக் காட்சிகளாக்கி இருக்கிறார் இயக்குநர்.

மகேஷ், அஞ்சலியின் கிராமத்து முன்னாள் காதலும் அது முறியும் விதமும் புதுக்கோணம். காதலன் அவமானப் படுத்தியதால் அஞ்சலியின் தோழி தற்கொலை செய்வது அதிர்ச்சியான நிஜம். வயதுக்கு வந்த அஞ்சலியின் தங்கையை நாய்களுக்கான அறையில் வீட்டுக்காரர்கள அடைத்து வைப்பது, சமூகக் கொடுமை. பழைய டீஷேர்ட், சட்டைகளை துவைத்து புதிதாக்கி பிளாட்பாரத்தில் விற்பது நகரத்து யதார்த்தம்.

'பிளஸ் 2 இல் ஆயிரம் புள்ளிகளுக்கு மேல் வாங்கினேன். இன்ஜினியரிங் படிக்க இருந்தேன். அப்பா இறந்ததால் தான் இங்கே வர வேண்டியதாகப் போச்சு. களைப்பா இருந்ததால் படிக்கட்டில் உட்கார்ந்து தண்ணி குடிச்சது தப்பா' என கண்ணீரும் கோபமுமாய் கேட்கும் மகேஷ், புதுமுகமாகத் தெரியவில்லை. அஞ்சலிக்குள் இருக்கும் நடிப்பை வெளிக்கொண்டு வந்திருக்கிறான்.



சேர்மக்கனி பூதக்கண்ணுடன் உளவு பார்க்கும் மேற்பார் வையாளர் இயக்குநர் ஏ.வெங்கடேஷ், கோப மூட்டுகிறார். நண்பனாய் வரும் பிளாக் பாண்டி, சிரிக்க வைக்கிறார். ஒரேயடியாக வேலையாட்களை கொத்தடிமைகளாய்க் காட்டுவது நெருடல். அதிகபாடல்கள், திணிப்பு. கிளைமாக்சில் அஞ்சலியின் முடிவு கதையுடன் ஒட்டவில்லை. மகேஷும் அஞ்சலியும் ஆடிப்பாடும் காட்சி வீடியோவில் பதிவாவது பதற்றத்தை ஏற்படுத்தவில்லை. இப்படி சிலகுறைகள், ஆங்காங்கே இருந்தாலும் அதெல்லாமே திருஷ்டிப் பொட்டுதான்.

விஜய் ஆண்டனி, பிரகாஷ்குமாரின் இசையில் 'அவள் அப்படி ஒன்றும் அழகில்லை', 'உன்பேரை சொல்லும் போதே' பாடல்கள் இதம்.

மொத்தத்தில் 'அங்காடித் தெரு' – ஜனக்கூட்டம் கூடும்!

## மயிரிழையில் உயிர் தப்பினார் விக்ரம்



மணிரத்னம் தமிழ், இந்தியில் இயக்கும் படம் ராவணன். இதில் விக்ரம் அபிஷேக் பச்சன், , இஸ்வர்யாராய், பிருத்விராஜ் பிரியாமணி நடிக்கின்றனர். இப்படத்துக்காக சமீபத்தில் சண்டைக்காட்சி ஒன்று மும்பை அருகே படமாக்கப்பட்டது. ஷாம் கவுசிக் சண்டைக் காட்சியை இயக்கினார். விக்ரம், இஸ்வர்யா ராய் இருவரும் நிற்பது போலவும் வில்லனால் வீசப்படும் குண்டு அந்தரத்தில் வெடித்து சிதறுவது போலவும் காட்சி அமைய வேண்டும்.

ஆனால் அப்படி வீசப்பட்ட குண்டு அந்தரத்தில் வெடிக்காமல் எதிர்பாராத விதமாக தரையில் விழுந்து வெடித்தது. இதையடுத்து விக்ரமும் இஸ்வர்யாராயும் விலகி ஓடினர். இதனால் அவர்கள் காயமின்றி தப்பியதாக படப்பிடிப்புக்குழுவினர் தெரிவித்துள் ளனர். இதையடுத்து படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. ஸ்டண்ட் இயக்குநர் ஷாம் கௌசிக் கூறும்போது, இது மிகவும் ரிஸ்க்கான சண்டைக் காட்சிதான். 25அடி தூரத்தில் இருந்து குண்டு எறிய வேண்டும். விக்ரம், இஸ்வர்யா நிற்கும் இடத்துக்கு 15அடிக்கு முன்னே அது வெடிக்கவேண்டும். இதுதான் திட்டம். ஆனால் எதிர்பாராத விதமாக இப்படி நடந்துவிட்டது என்றார்.

## கதாநாயகனாகும் வடிவேலுவின் மகன்!



தமிழ் சினிமாவின் வைகைப்புயல் வடிவேலு காமெடியில் உச்சத்தில் இருக்கும் நிலையில் அவருடைய மகன் சுப்ரமணியை ஹீரோவாக அறிமுகம் செய்யப்போகிறார். வடிவேலுவின் மூத்த மகன்பெயர் சுப்பிரமணி. 23 வயது இளைஞர். பிளஸ் -2 படித்து முடித்துவிட்டு கணனி மற்றும் அனிமேஷன் துறையில் சில படிப்புகள் முடித்துள்ளார். தற்போது சரியான வாய்ப்பு வந்திருப்பதால் தன் மகன் சுப்பிரமணியை கதாநாயகனாக அறிமுகம் செய்ய முடிவு செய்துள்ளார் வடிவேலு. நல்ல கதையாக அமைய வேண்டும் என்பதற்காக, தானே பல இயக்குநர்களிடம் கதை கேட்டு வருகிறாராம் வடிவேலு. இதுபற்றி வடிவேலுவிடம் கேட்ட போது என் மார்க்கெட் நன்றாக இருக்கும் போதே சுப்பிரமணியை தமிழக மக்களிடம் ஒப்படைக்கிறேன் எனக் கூறினார்.

## பஞ்சுமிட்டாய் தனுஷ்

'யாரடி நீ மோகினி', 'குட்டி' படங்களுக்குப் பின்னர் 'மித்ரன்' கே.ஜவஹர் இயக்கும் படம் 'உத்தமபுத்திரன்' இந்தப்படத்தை பாலாஜி ஸ்டூடியோ சார்பாக மோகன் அப்பாராவ், ரமேஷ் தாண்ட்ரா தயாரிக்கிறார்கள். படத்தைப் பற்றி மித்ரன், இந்த படத்தை முழுக்க முழுக்க குடும்ப நாடகம் என்று சொல்லலாம். அந்தளவுக்கு குடும்பக் கதைக்கும் காமெடிக்கும் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கும்.

ஹீரோ, ஹீரோயின் இருவருக்குமான காதல் ஒரு விபத்து போல தற்செயலாக ஏற்படுகிறது. காதலில் ஜெயிக்க ஹீரோ எப்படிப் போராடுகிறார் என்பது தான் கதை.



வழக்கம் போல் இதில் சுட்டித்தனமான தனுஷை பார்க்கலாம். கல்லூரி மாணவராக நடிக்கும் தனுஷ்க்கு பெரியப்பவாக பாக்யராஜ் நடிக்கிறார். தனுஷுடன் நான் பணியாற்றும் மூன்றாவது படம். எங்களுக்குள் எப்போதும் நட்பு இருக்கும்.



இந்தப் படத்தை பொறுத்தவரை முன்னைய படங்களைவிட இதில் எந்தளவுக்கு 'தி பெஸ்ட்' கொடுக்க முடியும் என்று எங்களுக்குள் ஆரோக்கியமான விவாதம் செய்து பணியாற்றுகிறோம். அமெரிக்காவில் படிப்பை முடித்து விட்டு சொந்தக் கிராமத்துக்கு வரும் பெண்ணாக ஜெனிலியா நடிக்கிறார். மோடர்ன், தாவணி என்று உடையில் மட்டுமல்லாமல் நடிப்பிலும் பல பரிமாணங்களை வெளிப்படுத் தியிருக்கிறார் ஜெனிலியா.

விவேக், கருணாஸ், 'நான் கடவுள்' ராஜேந்திரன், ஆசிஷ் வித்யார்த்தி, ஜெயப் பிரகாஷ் ரெட்டி, மயில் சாமி என படத்தில் நிறைய நடிகர்கள் இருந்தாலும் அவர் களுடைய பங்களிப்பு நிறைவாக இருக்கும்.


முதன் முறையாக தனுஷ் படத்துக்கு விஜய் ஆண்டனி இசையமைக்கிறார். ஒவ்வொரு பாடலுக்கும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு இசையமைத்திருக்கிறார். ஒளிப்பதிவாளர் பாலசுப்பிரமணியத்தின் பங்கு இதில் அதிகமாக இருக்கும். இந்தப் படம் பஞ்சுமிட்டாய் போல் மகிழ்ச்சியான படமாக இருக்கும்" என்கிறார் மித்ரன் கே. ஜவஹர்.

## சினேகாவின் ஆனந்த்



தமிழில் சினேகாவிடம் உள்ள படங்கள் 'வந்தேமாதரம்', 'முரட்டுக்காளை', ரீமேக் 'விடியல்' மற்றும் கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொண்ட பவானி. இதையடுத்து இரு புது படங்களுக்கு கால்ஷீட் கொடுத்துள்ளார். வெங்கி இயக்கும்பெயரிடப்படாத படத்தில் கணேஷ் வெங்கட்ராம் ஜோடியா நடிக்கிறார். தவிர கதாநாயகிக்கு முக்கியத்துவம் நிறைந்த ஆனந்த் என்ற படத்திலும் நடிக்கிறார்.



பொலிஸ் முத்திரையில் மொத்தம் நான்கு சிங்கமுகங்கள்.

எல்லோரும் மூன்று முகத்தைத்தான் பார்த்திருப்பார்கள். நான்காவது முகத்தைப் பார்த்தால் என்ன ஆகும் என்பது தான் 'சிங்கம்' படத்தின் கதை என்கிறார் இயக்குநர் ஹரி.

ஆறு, வேல் படங்களுக்குப் பின்னர் சூர்யாவுடன் கைகோர்த்து இருக்கும் ஹரி முழுப் படப்பிடிப்பையும் முடித்துவிட்டு எடிட்டிங்கில் பிஸியாக இருக்கிறார். "இதில் வித்தியாசமான பொலிஸ் அதிகாரி துரைசிங்கம் வேடத்தில் சூர்யாவைப் பார்க்கலாம்.

நடிப்புக்கும் கொமர்சியலுக்கும் முக்கியத்துவம் உள்ள வகையில் மிக பிரமாதமாக நடித்திருக்கிறார் சூர்யா.

அக்ஷனுக்கு மட்டும் முக்கியத்துவம் தராமல் காதல், காமெடி என்று நிறைவான படமாக இருக்கும். மொடர்ன் பெண்ணாக அனுஷ்கா நடிக்கிறார்.

இருவருக்குமிடையே காதல் ஆரம்பிக்கும் இடம் சுவாரஸ்யமாக இருக்கும் "சாமி படத்தில் காதலுக்கு எந்தளவு முக்கியத்துவம் இருந்ததோ அதுபோல் இதிலும் இருக்கும்.


வில்லனாக பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். "ஐயாவுக்கும் பின்னர் அவருடன் பணி புரிகிறேன். வில்லனாக அடாவடித்தனம் பண்ணாமல் நெகடிவ் வேடம் என்றாலும் அதில் ஒரு அழுத்தம் இருக்கும். தேவி ஸ்ரீபிரசாத் இசையில் எல்லாப் பாடல்களும் பிரமாதமாக வந்துள்ளன. நா. முத்துக்குமார், விவேகாவுடன் நானும் ஒரு பாடல் எழுதியுள்ளேன். ஒரு மெலடி பாடலை ஓமனிலும் ஒரு டூயட் பாடலை டுபாயிலும் மிக அழகாக என்னுடைய ஒளிப்பதிவாளர் பிரியன் படம் பிடித்திருக்கிறார்.

மற்றப்படி, இந்தப்படத்தில் அப்படி என்ன பிரமாண்டம் என்றால்... விமானத்திலிருந்து இரண்டு சக்கரவாகனம் வரை எத்தனை வகையான வாகனங்கள் இருக்கிறதோ, அத்தனை வகை வாகனங்களையும் பயன்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு காட்சியும் ரசிகர்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் வகையில் பிரமாண்ட படமாக 'சிங்கம்' இருக்கும் என்றார் ஹரி.



# உணர்வைத்தூண்டும் விடயங்களில் அரசு பாராமுகமாக இருக்கமுடியாது

## 29.03.2009 அன்று வீ.ஆனந்தசங்கரியினால் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம்



**மேன்மை தங்கிய மஹிந்த ராஜபக்ஷ,**
**இலங்கை ஜனாதிபதி,**
**அலரிமாளிகை.**

***மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கு!***

எதுவித பதவிக்கும் நான் ஆசைப்பட்டவன் அல்ல என்பதையும் அதிகாரத்தை பெற நான் பேராசை கொண்டவனும் அல்ல என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். சிங்களவர்கள், தமிழர்கள் ,முஸ்லிம்கள் அல்லது வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பேதமின்றி அனேக மக்களின் நலன் விரும்பி என்ற காரணத்தினால் எமது மக்களை பாதிக்கின்ற எவ்விதமான பிரச்சினைகள் ஏற்படும் போதும் அவற்றைத் தங்களுக்கு சுட்டிக்காட்டவேண்டியது எனது கடமையாகும். இடம்பெயர்ந்த மக்கள் அத்தகையோரின் எண்ணிக்கை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்டுள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் , அப்பிரச்சினைகளின் தீர்வுக்கு வழிமுறை போன்ற விடயங்களே இன்று பெருமளவில் மக்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் வரலாறு காணாத உணர்ச்சி மிக்க இடம் பெயர்ந்த மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அசட்டையீனம் காட்ட முடியாது. நான் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக் காட்டியது போல பல்வேறு மூலமாக கிடைத்த மாறுபட்ட தகவல்களின்படி முதலாவதாக இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை சம்பந்தமாகவும் அந்த எண்ணிக்கையினருக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு தேவைகள் சம்பந்தமாகவும் குழப்ப நிலை எற்பட்டுள்ளமையால் அப் பிரச்சினையை எவ்வாறு அணுக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களில் சிறுவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், முதியவர்கள், நலிவுற்றோர், அவயங்களை இழந்தோர் ஆகியோர் பற்றி அவர்களின் உறவினர்கள் பெரும் கவலை அடைகின்றனர். அவர்கள் படுகின்ற துன்பத்தால் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அவர்களுக்கு பெரும் அனுதாபம் ஏற்பட்டுள்ளது. இப்போதுதான் சர்வதேச சமூகம் பகிரங்கமாக விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தி இடம் பெயர்ந்த மக்களை விடுவிக்காமைக்கு கண்டமும் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில் சர்வதேச சமூகம், மனித உரிமை அமைப்புக்கள் ,ஐ.நா. ஸ்தாபனம் போன்றவை அவர்கள் பாதுகாப்பாக அரச கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்கு கொண்டுவரப்படும் வரை சரியான முறையில் அம் மக்கள் கவனிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். கடந்த 20, 25 ஆண்டு காலமாக விடுதலைப்புலிகளுக்கு உணவளித்து வந்த அரசு இம் மக்கள் விடுவிக்கப்படும் வரை தொடர்ந்து உதவ வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. தன் பிரஜைகளை சரியான முறையில் கவனிக்க வேண்டிய கடமைப்பாடு அரசுக்கு உண்டென நீங்கள் அளித்த உறுதிமொழி எனக்கு பெரும் நிம்மதியை தருகின்றது. இச் செய்தியை உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் வாழும் பலருக்கு நான் அனுப்பியுள்ளேன்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே! விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அகப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை சம்பந்தமாக அரசாங்கத்தினுடைய நிலைப்பாட்டுடன் என்னால் ஒத்துபோக முடியவில்லை. உண்மையான நிலையை அரசு கண்டறிய முயற்சிக்க வேண்டுமேயொழிய தெளிவற்ற நிலையில் அதை விட்டுவிட முடியாது. இது சம்பந்தமாக தங்களை எவரேனும் குறை கூறுவதை விரும்பாமையினாலேயே இதனை நான் வற்புறுத்தி கூறுகிறேன். ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பல இலட்சம் மக்களை மீளமுடியாமற் வேண்டிய பணி தங்களை காத்து நிற்கிறது. வடக்கே கடமையாற்றும் அரச அதிபர்கள் தரும் புள்ளி விபரங்கள் விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலால் தயாரிக்கப்பட்டவை என கூறி அவற்றை முற்று முழுதாக நிராகரிக்க முடியாது. இதுவரை காலமும் அரச ஊழியர்களால் தயாரிக்கப்பட்ட இவ் அறிக்கைகள் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை ஆகும். சனத்தொகை பற்றிய புள்ளிவிபரம் விடுதலைப்புலிகளின் தலையீட்டால் மிகைப்படுத்தப்பட்டமை உண்மையே. ஆனால் அனேகமாக ஏனைய விபரங்கள் அத்தனையும் பெறுமதிமிக்கதும் உண்மையானதுமாகும். கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அதிபர்கள் தத்தம் மாவட்டத்தில் முறையே 1,958,32 பேரும், 2,203,11 பேரும் மொத்தம் 4,161,43 பேர் 30.12.2007 இல் வசித்து வந்ததாக கணக்கிட்டுள்ளனர். விடுதலைப்புலிகளின் அழுத்தத்தால் இவ் எண்ணிக்கை இரண்டு மடங்காக காட்டப்பட்டதாக எடுத்துக்கொண்டாலும் கூட குறைந்தபட்சம் 2,008,71 பேர் அம் மாவட்டங்களில் இருந்திருக்க வேண்டும். வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட மக்களைச் சேர்ந்த 2,856,74 பேர் இக்கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. வவுனியா, ம, ன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 50,000 பேர் இடம் பெயர்ந்ததாக எடுத்துக்கொள்ளப்பட்டால் விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் மொத்தமாக குறைந்தபட்சம் 2,580,00 மக்கள் இருந்திருக்க வேண்டும். இவற்றில் 55,000 மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்து சேர்ந்துள்ளமையால் இத் தொகையை கழித்து மதிப்பிடின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் குறைந்தபட்சம் 2,000,00 இற்கு மேற்பட்ட மக்கள் இருக்க வேண்டும்.

நான் யாரையும் தப்பாக வழி நடத்தவோ அன்றி விடுதலைப் புலிகளின் பொய்ப் பிரசாரத்தால் தப்பாக வழி நடத்தப்பட்டவனோ அல்ல. என்னால் குறிப்பிடப்பட்டவை மறுத்துரைக்க முடியாத உத்தியோகபூர்வமான அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையே. சட்டப்படி இல்லாவிட்டாலும் இந்நிலைப்பாட்டை திருப்திகரமாக ஐ.நா.சபை, மனித உரிமை அமைப்புக்கள் பொதுவாக சர்வதேச சமூகம் ஆகியவற்றுக்கு விளக்க வேண்டிய தார்மீக கடமை அரசுக்கு உண்டு. நாங்கள் யாரையும் கோபமடைய செய்யத் தேவையில்லை. அத்தோடு நாட்டுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் எந்த ஸ்தாபனத்தையும் கோபமடைய வைக்க எவரையும் அரசு அனுமதிக்கக்கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தமது உறவினர்களுக்கு ஏது நடந்ததோ என அறிய முடியாது மிக்க கவலையும், பீதியும் கொண்டுள்ள உறவினர்களின் பயத்தையும், பீதியையும் போக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. எந்த அக்கிரமத்துக்கும் தயங்காத தம் செயற்பாடுகளுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியமற்ற, தாம் நன்மையடைய எதையும் செய்யக் கூடிய ஓர் இயக்கம் இதில் சம்பந்தப்பட்டுள்ளமையால் மேலும் பீதி அடைகிறார்ப்பது நியாயமானதே. தற்போதைய நிலையில் சரியான உண்மை நிலையை அறியும் வரைக்கும் குறைந்தபட்சம் 2,50,000 மக்களுக்கேனும் அரசு தொடர்ந்து உணவும்,மருந்து வகைகளும், அனுப்ப வேண்டியது தவிர வேறு வழியில்லை. ஆனால் என்னுடைய கணிப்பின்படி அங்கே 3,000,00 மக்கள் வரை இருக் கின்றார்கள் என்பதே அரசு இதை தன் நற்பெயரை காப்பாற்றுவதற்கு மட்டுமன்றி இந்த நாட்டு பிரஜைகளுக்கு செய்ய வேண்டிய கடமையாக செய்ய வேண்டும். அப்படியாயின் குற்றத்தை ஏற்க வேண்டிய பொறுப்பு விடுதலைப்புலிகளுடையதாகும். முன்பு ஒரு கடிதத்தில் விரக்தி காரணமாகவும், சர்வதேச சமூகம், புலம்பெயர்ந்த மக்கள் ஆகியோரிடம் அனுதாபம் தேடுவதற்காகவும் இந்தியாவில் நடந்தது போல இந்திய சுதந்திரப் போராட்டத்தை பிரித்தானிய அரசுக்கு எதிராக முடுக்கி விடவும் செய்த 1500 பேரை பலியெடுத்தும் அங்கவீனராக்கிய **ஜாலியன் வாலா பாக்** போன்றவொரு சம்பவத்தை உருவாக்கிக் காட்டத் தயங்கமாட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இம் மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ள 25 சதுர கிலோமீற்றர் பிரதேசத்துக்குள் கடும் நெரிசலுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு மேலும் பல கஷ்டங்களை ஏற்படுத்தும் வகையில் இராணுவம் போரை முன்னெடுத்துச் செல்லக்கூடாது என அரசு படைகளுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். 80 ஆயிரம் மக்களோ அன்றி இரண்டு இலட்சம் மக்களோ என்பதல்ல முக்கியம். மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்பதே உண்மையாகும். உள நோயால் பாதிக்கப்பட்டு பெரும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ள மக்கள் பிரேதங்களுடன் படுத்துறங்குவதும் தாம் அன்போடு நேசித்த உறவினர்களின் பிரதேசங்களை எரிக்கவோ,அடக்கம் செய்யவோ, வசதியின்றி வீசி எறிவதும் சகஜமாகி விட்டது. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் துர்நாற்றம் எடுக்கின்றன. இருப்பினும் தம் உறவினர்களில் ஒருவரையேனும் விட்டுவிட்டு வெளியேற அவர்கள் தயாரில்லை. முழுக்குடும்பமாக வெளியேறுவதையே விரும்புகின்றனர். கொடிய விசப்பாம்புகள்,விசக்குழவிகள்,நுளம்பு போன்ற ஜந்துக்களுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம், எந் நேரமும் ஓர் கொடிய தொற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயம் எல்லாவற்றுக்கு மேலாக தினம் 24 மணித்தியாலமும் குண்டு விழுமோ எத்திசையில் இருந்து செல் அடியும், பீரங்கித் தாக்குதலும் ஏற்படுமோ என்ற நிரந்தர பயத்துடனும், பீதியுடனும் வாழ்கின்றார்கள்.

ஜனாதிபதி அவர்களே! விடுதலைப்புலிகளின் சிறிய விமானம் கொழும்பில் குண்டு போட்ட வேளை மக்கள் எத்தகைய பயப்பீதியுடன் வாழ்ந்தார்கள் என்பது நாங்கள் அறியாததல்ல. விடுதலைப்புலிகள் மிருகத்தன்மை படைத்தவர்கள் அல்ல. அவர்கள் உண்மையான மிருகங்கள். நாங்கள் மிருகங்களும் அல்ல, மிருகத்தன்மை படைத்தவர்களும் அல்ல. இத்தகைய துன்பங்களை தம் உறவினர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற வேளையிலேயே தெற்கே வாழும் மக்களால் எப்படி நிம்மதியாக வாழ முடியும்? இங்கே குறிப்பிட்டவை மக்கள் படும் துன்பங்களில் ஒரு சிறு பகுதியே வெளிக்காட்டப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் 2500 ச.கி.மீ. விஸ்தீரணம் கொண்டது. அவர்களில் 2 இலட்சம் பேர் 25ச.கி.மீ. விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பில் வாழ்வது மானிடர்களால் முடியாத காரியமாகும். நாட்டில் ஓர் பெரும் அனர்த்தம் ஏற்படுவதற்கு முன் அம் மக்கள் விடுவிக்கப்படவேண்டும். ஆகவே தயவு செய்து இந்த அப்பாவி மக்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்படும் வரை இராணுவத்தை முன்னெறிச் செல்ல வேண்டாம் என ஆலோசனை வழங்கவும். பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர் ஊசலாடுகிறது. பல்லாயிரக் கணக்கான தோழர்களை தியாகம் செய்து இராணுவத்தினர் இவ்வளவு காலமும் எடுத்த நற்பெயரை ஒரு சிறு அசம்பாவித சம்பவத்தால் இழந்துவிடக்கூடாது. 4ஆயிரம் மக்கள் காயப்பட்டு திருமலைக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் என்றால் எத்தனை பேர் மரணித்திருப்பார்கள் என்பதை ஊகிக்க முடியும்? யாருடைய தவறினால் இவர்கள் மரணித்தார்கள் என்பதல்ல முக்கியம். அவர்களைக் காப்பாற்ற பல் வேறு வசதிகள் அரசுக்கு இருந்தும் அவ்வாறு அம்மக்களை இறக்க விட வேண்டுமா? என்பதே இன்று ஒவ்வொருவரும் எழுப்பும் கேள் வியாகும். எவ்வளவுக்கு எவ்வளவு கூடுதலான மக்கள் இறக்கின்றார்களோ அவ்வளவுக்கு புலிகளின் சந்தோஷமும் கூடும். அவர்களை பாராட்டுவதற்கு மக்களும் இருக்கின்றார்கள். ஆனால் இதே மனப்பான்மையை அரசு கடைப்பிடிக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு இறப்பும், காயமடைவதும் யாரால் நிகழ்ந்திருந்தாலும் அதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு அரசுக்கு முதல் இருந்தது. ஆனால் தற்போது யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் குண்டுவீச்சு,செல் அடி,பீரங்கித்தாக்குதலில் பலர் பாதிக்கப்படுகின்றனர். உணவு எடுத்துச்சென்ற கப்பலை தடுத்தால் மக்கள் பட்டினியால் மரணிக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே அரசுக்கு இருக்கிற ஒரே ஒரு வழி ஐ.நா. சபையை கொண்டு விடுதலைப்புலிகளை எச்சரித்து மக்களை விடுவிப்பதே. ஐ.நா.சபையினுடைய வேண்டுகோளை விடுதலைப்புலிகளினால் நிராகரிக்க முடியாது. உலக சமாதானத்துக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஐ.நா. உருவாக்கப்பட்டது. ஆகவே ஐ.நா. வின் உதவியை நாடுவது எந்தவித தப்பும் கிடையாது. யார் வேண்டுமானாலும் எதனையும் கூறட்டும். பயங்கரவாதத்தில் தாக்கத்தை ஒருவர் உணர வேண்டுமாக இருந்தால் தன் குடும்பத்தில் நிற்க அரிய ஜீவனை இழந்திருக்க வேண்டும். தாங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற முறையிலும் நாட்டுமக்களின் பாதுகாப்புக்கும் பொறுப்பானவர் என்ற காரணத்தினாலும் குறைந்தபட்சம் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் உதவியை பெற்று மேலும் தாமதமின்றி அகப்பட்டுள்ள மக்களை பாதுகாப்பாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய தொரு ஒழுங்கு இல்லாத பட்சத்தில் ஐ.நா. சபையை அழைப்பது எங்களுக்கு ஒரே வழி. அன்றேல் ஏதாவது நட்பு நாடுகளின் உதவியை பெறவேண்டியது தவிர்க்க முடியாத கடமையாகும்.

நாம் அரசியலில் இலாபம் தேட முயற்சிக்கவில்லை. ஆனால் என்னுடைய கடமையை ஒரு தமிழன் என்றில்லாமல் இலங்கை பிரஜை என்ற கோதாவிலே இதை செய்கிறேன். நீங்களும் நானும் எமது கடமையில் இருந்து தவறி விட்டோம் என்று சர்வதேச சமூகம் குற்றம் சுமத்த இடமளிக்கக்கூடாது என்பதே எனது பெரு விருப்பமாகும்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

(அ/5045)

தமிழ் மக்களின் பிரச்சினையை
துணிச்சலுடன் உலகறியச் செய்த
மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு
உங்கள் வாக்கை அளியுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி X 1

# மூன்று நட்சத்திர நல்லூர் ஹோட்டல் வரும் பெப்ரவரியில் திறக்கப்படும்

## சங்கிலியன் பெயரிலும் அமைக்க பி.ஜே.ஹோட்டல்ஸ் திட்டம்



நல்லூரில் 3 நட்சத்திர ஹோட்டல் ஒன்றினை நிர்மாணிக்கும் பணிகளை மேர்ச்சண்ட் வங்கி ஆரம்பித்துள்ளது. இந்த ஹோட்டல் அடுத்த வருடம் பெப்ரவரியில் திறந்து வைக்கப்படும் என வங்கியின் தலைவர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நல்லூர், பருத்தித்துறை வீதியில் நல்லூர் முருகன் கோவிலுக்கு சற்றுத் தொலைவில் இந்தக் ஹோட்டல் அமைக்கப்படுகிறது.

15 பரப்புக் காணியில், 80 அறைகள், நீச்சல் தடாகம், களியாட்டப் பிரிவு, உடற்பயிற்சிப் பிரிவு போன்ற அனைத்து வசதிகளையும் கொண்டதாக ஹோட்டல் நல்லூர் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த 29 ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநர் தலைமையில் நடைபெற்றது. இந்த செயற்றிட்டத்திற்காக மேர்ச்சண்ட் வங்கி 40 கோடி ரூபாயைச் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

இங்கு உரையாற்றிய வங்கியின் தலைவர் ஜனக நாணயக்கார, தற்போது யாழ்ப்பாணத்துக்கு வருவோரின் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. இருந்த போதும் யாழ். நகரில் 10 முதல் 15 தங்கு விடுதிகளில் மொத்தமாக சுமார் 150 அறைகளே காணப்படுகின்றன. இது யாழ்ப்பாணத்துக்கு வந்து போகும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளுக்குப் போதுமானதாக இல்லை என்பதால் இங்கு தங்குமிட வசதி ஒரு பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

Hotel Nallur

இதனைக் கருத்தில் கொண்டே இங்கு நட்சத்திர அந்தஸ்துடனான ஹோட்டலை அமைக்கத் தீர்மானித்தோம். இன்னும் 10 மாதங்களுள் அனைத்து நிர்மாண வேலைகளையும் பூர்த்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பி.ஜே.ஹோட்டல்ஸ் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் 'கிங் சங்கிலியன்' என்ற பெயரில் ஹோட்டலை அமைக்கத் தீர்மானித்துள்ளதாகவும், 2016 ஆம் ஆண்டளவில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளின் வருகையை எட்டும் நோக்கில் தங்கு விடுதிகளின் அறை வசதியை 50 ஆயிரம் அறைகளாக உயர்த்தும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முயற்சியின் ஒரு அங்கமாக இக் ஹோட்டல் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஹோட்டல் வட்டாரங்கள் தெரிவித்தன.








இந்தியாவில் புவனேஸ்வரில் கடந்த ஞாயிறன்று, ஒரு இந்தியப் பெண் தன் தலையில் உலர்ந்த மாட்டின் சாணத் தட்டுகளுடன் ஆற்றைக் கடந்து தன் கிராமத்துக்கு திரும்புகிறாள். இந்திய ஆடை வடிவமைப்பாளர் நம்ரதா ஜோசிபுராவின் வடிவமைப்புகளை கடந்த சனிக்கிழமை டில்லியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், காட்சிப்படுத்தும் ஒரு மொடலை(வலது) காண்கிறீர்கள். இது குறித்து தென்னாசிய பொருளியலாளர் ஒருவர் கூறுகையில், இதுவே இப் பிராந்தியத்தின் இரண்டு முகங்கள்.....

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.21 | 114.82 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 171.45 | 175.01 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 152.13 | 155.80 |
| சுவிஸ் பிராங் | 106.52 | 109.88 |
| கனேடிய டொலர் | 110.65 | 114.32 |
| அவுஸ்திரேலிய டொலர் | 102.88 | 105.98 |
| சிங்கப்பூர் டொலர் | 80.57 | 82.50 |
| ஜப்பான் யென் | 1.20 | 1.23 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.54 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.04 | |

# அம்பாந்தோட்டை துறைமுக நடவடிக்கைகள் நவம்பரில் ஆரம்பமாகும்-சமல் ராஜபக்ஷ

## சர்வதேச விமான நிலைய,விளையாட்டு மைதானப் பணிகள் மும்முரம்

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக நிர்மாணப் பணிகளில் 75 சதவீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தோண்டப்பட்ட துறைமுகப் பகுதியில் கடல்நீர் நிறைக்கப்படவுள்ளதோடு, நவம்பர் மாதத்தில் முதலாவது கப்பல் இங்கிருந்து பயணிக்கவுள்ளது என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் பாரிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக 35 கம்பனிகள் முன்வந்துள்ளன.

கனரக வாகன உற்பத்தி கம்பனி, ஆட்டோ கம்பனி, இரு சீமெந்து



உற்பத்திக் கம்பனிகள், உரக் கம்பனி, கப்பல் திருத்தும் கம்பனி உட்பட பல கம்பனிகள் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

எரிவாயுக் கம்பனி ஒன்றும் துறைமுகப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பல ஹோட்டல்களும் இங்கு புதிதாகக் கட்டப்படவுள்ளன.

துறைமுகம் காரணமாக 60 ஆயிரம் அம்பாந்தோட்டை இளைஞர், யுவதிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

இதேவேளை அம்பாந்தோட்டையில் சர்வதேச விளையாட்டரங்கு அமைக்கப்பட்டு வருகிறது. பாரிய வீதி அபிவிருத்திப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அதேபோல், அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விமான நிலையம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் செயற்படத் தொடங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் 2018-ல் நடக்கவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டி உலகின் பார்வையை அம்பாந்தோட்டை மீது திருப்பியுள்ளது.

# யாழ்ப்பாணம் அபிவிருத்தி கண்டுவருகிறது சி.டி.பி.நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு

தற்போது வடக்கில் வர்த்தக வாய்ப்புகள் மிகவும் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணம் அபிவிருத்தி கண்டுவரும் அதேநேரம் வர்த்தக ரீதியாகவும் நாளுக்குநாள் முன்னேற்றம் அடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறன தொரு பின்னணியில் எமது நிறுவனத்தின் 31 ஆவது கிளையை இங்கு திறந்து வைப்பது எமக்கும், இப் பிரதேசத்திற்கும் பரஸ்பரம் நன்மை தரக்கூடியதொரு முயற்சியாகும் என கடந்த வாரம் சிட்டிசன் டெவலொப்மண்ட் பிஸ்னஸ்பினான்ஸ்சின்(CDB) கிளையை யாழில் திறந்து வைத்து உரையாற்றிய சி.டி.பியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் நாணயக்கார தெரிவித்தார்.

## வர்த்தக செய்தித் துளிகள்

### கொழு.-சிங்கப்பூரிடையே ஏயாபஸ் விமானசேவை



எதிர்வரும் மே முதலாம் திகதியிலிருந்து சிங்கப்பூர் எயார்லைன்ஸ் கொழும்புக்கும், சிங்கப்பூருக்குமிடையே ஏயாபஸ் A 330-300 விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளது. இந்த விமான சேவை நவீன இருக்கை வசதி, பொழுதுபோக்கு வசதி மற்றும் 15 அங்குல திரை வசதி உட்பட்ட நவீன வசதிகளையும் கொண்டதாக சிங்கப்பூர் எயார்லைன்ஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### இன்ராட் எக்ஸ்போ 2010 கொழும்பில் மே 7-9

இன்ராட் -எக்ஸ்போ 2010 வர்த்தகக் கண்காட்சியும் முதலீட்டு மாநாடும் எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை தேசிய வர்த்தக சங்கம் (NCCSL) தெரிவித்துள்ளது.

தென்னாசியாவின் வர்த்தக வாசல் என்னும் தொனிப் பொருளில் இக் கண்காட்சி நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3746.50 | 21.91 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4328.70 | 57.97 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 565.99 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : கொமர்ஷல் வங்கி, என்வெயர்மெண்டல் றிசோசஸ், டயலொக் ரெலிகொம், ஜோன் கீல்ஸ், நெஸ்ரல் லங்கா.

***சரிவைக் காட்டிய பங்குகள்***: றோயல் பீச் ஹோட்டல்ஸ், ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ், லங்கா ஐ.ஓ.சி., கலதாரி ஹோட்டல்ஸ், ஆஸிரி ஹொஸ்பிட்டல்.

# அப்பிள் ஐ'பாட் அறிமுகம்:பெரிய அளவு ஐ போன்; சிறிய அளவு லப்ரொப்:எப்படியும் அழைக்கலாம்

(நியூயோர்க்)

55 ஆயிரம் ரூபாய் விலை கொண்ட மொபைல் போனின் 3-வது ரகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது அப்பிள் நிறுவனம்.

ஐ பாட்(iPad) என்ற பெயரில் தயாராகியுள்ள இது கிட்டத்தட்ட ஒரு கணனியின் செயற்பாடுகளைக் கொண்டதாகவுள்ளது.

பெரிய அளவு ஐ போன், சிறிய அளவு லப்ரொப் கம்பியூட்டர்(மடிக் கணனி) எப்படி அழைத்தாலும் பொருத்தமாகவிருக்கும் வடிவத்தில் வந்துள்ளது அப்பிள் நிறுவனத்தின் ஐ பாட்.

கணனியின் அனைத்துச் செயற்பாடுகளையும் கொண்டிருக்கும் இந்த ஐ பாட், கணனியை விட கவர்ச்சியாக, எடை குறைவாகவுள்ளது.

64 ஜிகா பைட்(GB) மெமரிக் காட்வரை பொருத்தக்கூடிய வசதி கொண்ட இந்த கையடக்கத் தொலைபேசியில் வைப், புளூருத் வசதிகளும் உள்ளன.

10 அங்குல, முழுக்க முழுக்க தொடுதிரை வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தாம் விரும்பியவாறு மெல்லியதாக, எடுத்துச் செல்ல வசதியாக இது உருவாக்கப்பட்டுள்ளதாக அப்பிள் நிறுவனத் தலைவர் ஸ்ரீவ் ஜோ தெரிவித்தார்.

ஐ போனில் பெரிய அளவு போல உள்ள இந்த தொலைபேசி 12 புதிய மென்பொருட்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.




ஐ பாட் மூலம் இணையத்தளங்களைப் பார்க்கும் வசதி இருப்பதால் மடிக்கணனியைவிட இதனைப் பயன்படுத்துவது எளிது என்றும், தொடுதிரை மூலம் வேகமாக இணையப் பக்கங்களைப் பார்க்க முடியும் என்றும் அப்பிள் நிறுவனத் தலைவர் ஸ்ரீவ் ஜோ தெரிவித்தார்.

சிமாட் போனும் மடிக் கணனியும் இணைந்த வடிவாக உருவாகியுள்ள ஐ பாட், இரண்டையும் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பயன்படும் என்றும் அப்பிள் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

### ஐரோப்பிய ஒன்றியத்தில் வேலையற்றோர் 10 வீதமானது




ஐரோப்பிய ஒன்றியத்தில், 16 நாடுகளை உள்ளடக்கிய யூரோ வலயத்தில், வேலையற்றோர் வீதம் கடந்த மாதம் 10 சதவீதத்தை அடைந்துள்ளது.

பொது நாணயமான யூரோவை அறிமுகப்படுத்தியபின் இந்த நாடுகளில் வேலையற்றோர் வீதம் இரட்டை இலக்க வீதமாவது இதுவே முதல் தடவை.


இதில் ஸ்பெயினில் மிக அதிகமாக 19 வீதமானோர் வேலையற்றோராகக் காணப்படுகின்றனர். கடந்த மாத நிலைவரப்படி ஒன்றரைக் கோடி பேர் இவ் வலயத்தில் வேலையற்றோராகவுள்ளனர்.

**கு.முருகதாஸ்**

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்–2010




சீ.கோபிதாசன்
(தொழிலதிபர்)





த.திருஞானசம்பந்தர்
(Rtd புகையிரதநிலைய அதிபர்)





ச.பத்மநாதன்
(விவசாயி)





செ.மகாலிங்கம்
(Rtd திட்டமிடல் பணிப்பாளர்)




செ.முத்துலிங்கம்
(ஆசிரியர்)




வீ.ஆனந்தசங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி
(சட்டத்தரணி)




வ.சண்முகராசா
(Rtd இலிகிதர்)





அ.முருகேசு
(Rtd அதிபர்)

## விடியலின் சின்னம் உதயசூரியன்!

## வீழ்ந்த எம் மக்களுக்கு கரம் கொடுப்போம்





இ.சாந்தசொரூபன்
(பொறியியலாளர்)




இ.இரத்தினமணி
(சமாதான நீதவான்)




சு.இராஜஇராஜேஸ்வரி
(Rtd ஆசிரியை)




கு.சதாசிவமூர்த்தி
(Rtd அதிபர். பலாலி ஆசிரியர் கலாசாலை)

(வி-5035)

# தமிழர் விடுதலைக் கூட்டணி

X

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### முகங்களின் அழைப்பிதழ்

சுயமிழந்துபோன
சுவர்களின் பாடலாய்
திரும்பும் திசையெங்கும்
முகங்களின் அழைப்பிதழ்
பழைய முகங்கள்
பழகிய முகங்கள்
புதிய முகங்கள்
புதுமையாய் சில முகங்கள்
பார்த்து அலுத்த முகங்கள்
பார்க்கப் பிடிக்கா முகங்கள்
முகங்களுக்குள் சில முகங்கள்
சிதறிப்போன பல முகங்கள்
எல்லா முகங்களும் சிரித்தபடி
எங்கள் அகங்களை
நிரப்ப முடியாமல்- மீண்டும்
தொடக்கப் புள்ளியில்
தொடங்குகின்றன
முகவரி இழந்துபோன
எம் முகங்களின்
வாழ்வு மீட்புக்காய் - எதுவித
பிரதிபலிப்புக்களுமின்றி

புலோலியூர்
வேல்நந்தன்

### கிளியோபாட்ரா

கண்களில்
படபடக்கும் பட்டாம் பூச்சி
நெஞ்சுக்குள் சிறகடிக்கும்
ஆயிரம் ஆசைகள்
சொந்தங்கள் தொடர்ந்திட
பிறர் நெஞ்சங்களைக் கவர்ந்திட
புன்னகையை விலைக்கு வாங்கியவள்
பாதிராத்திரி தட்டி எழுப்பி
பள்ளிக்கூடக் கதை சொல்லுவாள்
பரீட்சை நேரம் வந்துவிட்டால்
பசியைக் கூட மறந்திடுவாள்
பாசச் சிறைக்குள் பூட்டி எம்மை
பரிதவிக்க வைப்பவள்
எகிப்து நாட்டுப் பேரழகி
இங்கு வந்து பிறந்து விட்டாள்
எட்டி நில்லுங்கள் இவள் எட்டாக்கனி
ஆனால் என் அன்பிற்குரியவள்

திருமதி.இ.நவதர்சினி
கோணாவலை வயாவிளான்

### முட்டாளாக்கும் உன் நினைவுகள்

என் இதயத்தில்
ஒய்யாரமாய் உட்கார்ந்திருக்கும்
உன்
நினைவுகளை...
ஒளித்துக்கட்டத்தான்
ஓயாமல் முயற்சிக்கிறேன்
ஆனாலும்
என்னை முட்டாளாக்கிவிட்டு – என்
உடலின் மூலை முடுக்குகளுக்குள்
ஓடிச் சென்று...
குருதிக்குச் சிவப்பு நிறத்தைக்
கொடுக்கும்
அந்த ஈமோக்குளோபினோடு
கலந்து விடுகிறதே!
உன் நினைவுகள்
நான் என்ன செய்ய?

செல்வி.க.அருவி
புத்தூர் வடக்கு

### யாருக்கடா சொல்லியழுவது!

யாருக்கடா சொல்லியழுவது!
இந்த துயரத்தை
வன்னியில்
பிஞ்சு குழந்தையும் அல்லவா
சிலுவை தூக்கிச் சுமந்தது

உலகம் எங்களைக் கைவிட்டது
உலகம் மட்டுமா
கடவுளும்தான்
எங்களைக் கைவிட்டார்
நாங்கள் ஊர்திரும்ப
மனமில்லாமல்
ஊர்திரும்பி வந்தோம்
ஏனென்றால் அன்று
எங்களோடு வந்தவர்கள்
புதைந்து விட்டார்கள்
மண்ணில்


யாருக்கடா சொல்லியழுவது
இந்த துயரத்தை
வன்னியில்
பிஞ்சுக் குழந்தையும் அல்லவா
சிலுவை தூக்கிச் சுமந்தது!

உயிரோவியன்

### மறக்க முடியுமா

அன்பே...!
உன்னோடு பழகிய நிமிடங்கள்
அது ஒரு கனாக்காலம்
உனைக்காண ஓராயிரம்
நினைவுகள் என் மனதில்
நீ என்னை மறந்துவிட்டாய்
என்பதற்காக என்னால்
நட்புறவாடிய நாட்களைத்தான்
மறக்க முடியுமா?

ப.கலைமகள்
களபூமி



## மௌனத்தின் தேடல் – 13

### தேடுதல் வேட்டை

கட்டாக்காலி மாடுகள்
இந்தக் குப்பைகளுக்குள்ளே
தேடுவது என்ன?
புதையலா இல்லை தம்
வயிற்றுக்கு உணவையா

சுப்பிரமணியம் ஜெயகுபன்
பகுத்தித்துறை

### நல்ல வண்டிப் பசுக்கள்

பயணக் களைப்போட்ட
நகரப் பெருவெளியில்
நல்ல பஸ்வண்டிகள்
பயணிகள் கழிவோட்ட
நகரப் பெருவெளியில்
நல்ல வண்டிப் பசுக்கள்

சந்நிதி கஜா

புனிதமான பாலைப் பொழியும்
புண்ணிய கோமாதாவே
யாழ் நகரின் கழிவகற்றும்
தொட்டியாக மாறியது ஏனோ?
யாழ் நகரை
சுத்தப்படுத்துவதற்கு உனக்கு
அனுமதியளித்தது யாரு?

கந்த ஞானமுத்து
கைதடி மேற்கு

### நகரத்து நாற்றம்

அகதியாகி அழியும்
நம் இனம்போல- தான்
அழுக்கடைந்து நாறுகிறது
நம் நகரத்து சாலை
சொல்லித் திருத்த
யாருமில்லை
சொல்லாமல் இடும்
குப்பையை

மூலக்சி
கல்லுவம்

### பேரழிவின் தரவுகள்

ஆறறிவின் விரிவாக்கம்
அழிவின் வரவுகளுமாகி
பாரெங்கும் பரவிப்பல
பிணிகளின் பிறப்புக்களாகும்
பேரழிவுத் தரவுகளாய்
புள்ளியிடும் கோலமிது

தென்னல்வை
அரிபுத்திரன்

### மனிதரின் நிலை

கட்டவிழ்ந்த இந்த
மாடுகளின் கூட்டம்
குப்பைகளை மேய்வதைப்
போலத்தான்
ஆறறிவு கொண்ட மனிதர்
கூட்டமும் தீய விடயங்களுக்குள்
சென்று நுழைகிறதே!

ந.கேமராஜி
யாழ்ப்பாணம்

யாழின் தெருவோரத்தில்
வீழ்ந்த குப்பைகளையே
கவனிப்பார் இல்லையெனில்
கலாசாரத்தில் வீழ்ந்த
குப்பைகளை
கவனிப்பார் யாரோ?

சங்கைநகர்
கண்மணி




### இமயம் தொட...

தோல்வி என்று எண்ணி,
தொடங்காதே பயணத்தை
வெற்றிக்காய் போராடு
தோல்வியெனின்
துவண்டுபோகாதே!
தோல்வி கண்டு சலித்தால்
சிலந்தி வலை பின்னாது!
சோர்வுகொள்ளாதே!
வெற்றிக்கு தோல்வி
வழிவகுக்கும்

மாவை. நா.கஜேந்திரா

### பாவமறியா தெய்வங்கள்

பசுக்களா நீங்கள் - இல்லை
பாலைவனத்தில் பயணிக்கும்
ஒட்டகங்களா...
பாவமறியா வாய்பேசா
தெய்வங்களே!
கோமாதா குலமாதாவென
உங்களை போற்றும்
எம் சமூகமைப்பில்
குப்பை கூழங்களில் இரைதேடும்
அவலம் ஏன்தானோ உங்களுக்கு

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### இகமதனைப் பொருந்திவாழ்

மாநகரத்தை மாசாக்கும்
மானிடனே – உன்
மாடுகளும் ஆடுகளும்
மன்றாடிக் கேட்கின்றன
எம்மைக் கொல்லாதேயென்று
இனியாவது திருந்திவாழ்
இகமதனைப் பொருந்திவாழ்

ஜெ.ஜோ.திவ்வியானந்

### அநியாயம்

பசுந்தரையில் மேயும்
பசுக்களுக்கு
மேய்வதற்கு கிடைத்த
இடம் இதுவா?
ஓ...அநியாயம்!
ஓ...அநியாயம்!

ந.பிரியதர்சினி
வியாவிளான்,காரைநகர்

## மௌனத்தின் தேடல்- 12



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09.04.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# சர்வதேச ரீதியாக 130 நாடுகளில் கட்டாய ஆரம்பக்கல்வி நடவடிக்கைகள்

## யுனெஸ்கோ அமைப்பின் அறிக்கை

(கொழும்பு)

சர்வதேச ரீதியாக 130 நாடுகளில் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ அமைப்பினால் வெளியிடப்பட்ட "சர்வதேசத்துக்கான கல்வி அறிக்கை 2010" இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இவை சட்ட வரையறைக்குள் கொண்டு வரப்படவில்லை.

ஐக்கிய நாடுகளின் இந்த அறிக்கையில் உலக வங்கியினால் 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பின் அறிக்கை குறித்தும் விபரிக்கப்பட்டுள்ளது.

சில நாடுகளில் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் சில நாடுகளில் கல்வி நடவடிக்கைகள் குறித்து மக்கள் தாமாகவே முடிபு எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னாள் கல்வி அமைச்சும் சி. டபிள்யூ கன்னங்கராவினால் இலவச கல்வி முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையை பொறுத்தவரை ஆரம்ப பாடசாலை கல்வி முதல் உயர்கல்வி வரை மாணவர்கள் இலவசக் கல்வியை பெறுகின்றனர்.

இருப்பினும் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையில் இலவசக் கல்வி முறை சட்டமூலம் கொண்டுவரப்படவில்லை.

எவ்வாறாயினும் இலவசக் கல்வி இலங்கையில் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதாக சர்வதேச புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-9)

# தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸார், இ.போ.ச. சாரதிகள் நடத்துனர்களின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸாரை தவிர்ந்த ஏனைய பொலிஸார் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவிருக்கின்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் விடுமுறைகள் யாவும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாரின் விடுமுறைகள் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையிலும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை பிரதான பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளின் விடுமுறைகள் ஒரு மாதத்திற்கு முன்னரே இரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ள போதிலும் அத்தியாவசிய தேவையின் நிமித்தம் விடுமுறையை பெற்றுக் கொள்ள விரும்புவோர் வலய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் அனுமதியுடன் விடுமுறையை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் கடமைகளில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துசபை சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் விடுமுறைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இரத்து செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துசபை அறிவித்துள்ளது.

வாக்குப்பெட்டிகளை, வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் ஏற்றி செல்லும் பஸ்களிலும், தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் படையினரை ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் பஸ்களிலும் சேவையில் ஈடுபடுகின்ற சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் விடுமுறைகளே இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களில் ஆயிரத்து 400 பஸ்கள் இம்முறை சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கு தீர்மானித்துள்ள தேர்தல்கள் திணைக்களம் தனியார் பஸ்களையும் இந்த சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளது. (6)

# கட்சித்தாவலுக்கு எதிரான மக்கள் இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் ஐ.தே.க. வேட்பாளர் முஸம்மில் கைச்சாத்து

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் ஏ.ஜே.எம். முஸம்மில் மக்கள் இணக்கப்பாட்டு உடன்படிக்கையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் முன்னிலையில் கைச்சாத்திட்டார்.

கொழும்பு ரேணுகா ஹோட்டலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய ஏ.ஜே.எம் முஸம்மில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் தாம் மக்களுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் எந்தவொரு குடிமகனும் தனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக யானைச் சின்னத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் மேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜே.எம். முஸம்மில் போட்டியிடுகின்றார்.

மக்களிடம் வாக்குகளைப் பெற்றவர்கள் தாம் விரும்பியபடி கட்சித்தாவலை மேற்கொள்கின்றார்கள் என்றும் அவர் கூறினார். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதுபற்றி தெரியுமா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இது கேள்விப்பட்டால் ரணில் விக்கிரமசிங்க மிகவும் மகிழ்ச்சியடைவார் என்றும் ஏ.ஜே.எம்.முஸம்மில் பதிலளித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் கட்சியுடன் மாத்திரம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகவும் தாம் இன்று மக்களின் முன்னிலையில் வந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஓ-6)

# வாக்களிப்பு நிலையங்களுக்கு இம்முறை இரு உதவியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

## தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்களுக்கு இம்முறை இரண்டு உதவியாளர்களை நியமிப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்களில் இறுதி நேரத்தில் ஏற்படுகின்ற சிரமங்களை தவிர்த்துக் கொள்வதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் சில மாவட்டங்களில் வாக்குச்சீட்டின் நீளம் அதிகமாக இருப்பதுடன் இன்னும் சில நிலையங்களுக்கு மேலதிகமான வாக்குப் பெட்டிகளை வழங்க வேண்டி இருப்பதனால் சிரேஷ்ட வாக்கெடுப்பு அதிகாரி பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதனைத் தவிர்த்துக் கொள்ளும் வகையிலேயே உதவியாளர்களாக இருவர் நியமிக்கப்படவுள்ளனர். மாவட்ட தேர்வத்தாட்சி அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வாக்குச் சீட்டின் நீளம் அதிகமாக இருப்பதனால் அதனை மடித்து வாக்குப்பெட்டிக்குள் போடுவதற்கு வாக்காளர்கள் தடுமாறலாம்.

அப்போது உதவி செய்வதற்கு உதவியாளர் ஒருவரும் வாக்குப் பெட்டிக்கு ஸ்டிக்கர் ஒட்டி பொதி செய்யும் போது சிரேஷ்ட வாக்கெடுப்பு அதிகாரிக்கு உதவுவதற்கு மற்றுமொருவர் என இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த கால தேர்தல்களின் போது வாக்களிப்பு நிலையத்திற்கும் சிரேஷ்ட வாக்கெடுப்பு அதிகாரிக்கு உதவிசெய்வதற்கு உதவியாளர் ஒருவர் மட்டுமே நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (6)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010

எஸ்.எக்ஸ். குலநாயகம்



வடமராட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தொடரவேண்டும்.

வடமராட்சியின் வாக்காளர் பெருமக்களே,

எஸ்.எக்ஸ். குலநாயகத்திற்கு

உங்கள் வாக்கை வழங்குங்கள்.

தமிழ் அரசியலில் 40 ஆண்டுகாலம் பட்டம் தீட்டப்பட்டவர் குலம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி | X

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

எஸ். எக்ஸ். குலநாயகம் | 12

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

## சோமாலிய கடற்கொள்ளையரின் பிடியிலுள்ள

# இலங்கை கப்பல் பணியாளர்களை விடுவிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் பணயக் கைதிகளாக தடுத்துவைக்கப் பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த கப்பல் பணியாளர்கள் 13 பேரை விடுவித்துக் கொள்வதற்காக இன்டர்நஷனல் பங்கரிஸ் கம்பனி என்ற கப்பல் நிறுவனம் சோமாலியா கடற்கொள்ளையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

க்ப்பல் பணியாளர்களை விடுவிக்க சோமாலிய கடற்கொள்ளையர்கள் 20 மில்லியன் டொலர்களை கப்பமாக கோரியுள்ளனர்.

இலங்கைக் கப்பல் பணியாளர்களை விடுவிப்பது தொடர்பில் கடற்கொள்ளையர்களுக்கும் கப்பல் நிறுவனத்திற்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தை குறித்து கென்யாவில் உள்ள இலங்கைத் தூதரக அலுவலகம் ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது.

இதுவரை வெளியாகியுள்ள தகவல்களின் படி, இலங்கையர் பணியாற்றிய கஸால் சவுதி கப்பல் நிறுவனம் 5 மில்லியன் டொலர்களை செலுத்த இணங்கியுள்ளதாக தெரிகிறது. (6)

## இலங்கை கிரிக்கெட் சபையின் நடவடிக்கை

# குறித்து ஐ.தே.க.வேட்பாளர் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட்சபையின் நடவடிக்கை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஜோன் அமரதுங்க அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

பெரியவெள்ளி போன்றதொரு கிறிஸ்தவர்களின் புனித நாளில், இலங்கை கிரிக்கெட் சபை உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டு விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இந்த நடவடிக்கை சிறுபான்மை கிறிஸ்தவர்களின் மனதைக் காயப்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளதாகவும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களின் துக்கம் அனுஷ்டிக்கும் நாள் ஒன்றில் கிரிக்கெட் சபை கொண்டாட்டமான விழாக்களை ஒழுங்கு செய்தமை ஏற்புடையதல்ல என சுட்டிக்காட்டிய அவர், இது கிறிஸ்தவ சமூகத்தை இழிவுபடுத்துவதற்கு நிகரானதென குறிப்பிட்டுள்ளார். (6)

# தேர்தல் பிரசாரங்களில் எம்.ஜி.ஆரின் பாடல்கள்

(கொழும்பு)

எம்.ஜி.ஆரின் பாடல்களைப் பலர் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தி வருகின்றனர். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின், அவரது பெயர், படத்தை வைத்து இன்றுவரை தமிழகத்தில் அரசியல் நடந்து வருகிறது.

தற்போது, இலங்கை பொதுத் தேர்தலிலும் எம்.ஜி.ஆர்.படங்கள், பாடல்கள் முக்கிய இடத்தைப் பிடித்து வருகிறது.

குறிப்பாக எம்.ஜி.ஆரின் துடிப்புள்ள பாடல்கள் மூலம், தங்கள் வேட்பாளர்களை வாக்காளர்கள் மத்தியில் அடையாளம் காட்டுவதில் முக்கிய கட்சிகள் தீவிரமாக உள்ளன.

நான் ஆணையிட்டால், உழைக்கும் கைகளே , நான் உங்கள் வீட்டுப்பிள்ளை , ஒன்றே குலமென்று பாடுவோம் என எம்.ஜி. ஆரின் சினிமாப் பாடல்கள் தற்போது இலங்கை தேர்தல் களத்தில் ஒலிக்கிறது.

அனைத்து எப்.எம்.களிலும் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரமாகவும் இப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழர்களை கவர்ந்திழுக்க எம்.ஜி.ஆர். தான் சரியான தேர்வு என்பதில், தமிழகத்தையே மிஞ்சி விட்டது இலங்கை அரசியல். (6)

# ஓட்டமாவடி பாலம் ஜனாதிபதியால் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஸ்பெயின் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 770 மில்லியன் ரூபா செலவில் ஓட்டமாவடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டத்தின் கீழ் கிழக்கின் வசந்தம் கருத் திட்டத்தினூடாக அமைக்கப்பட்டுள்ள இப்பாலம் 250 மீற்றர் நீளத்தையும் 10.5 மீற்றர் அகலத்தையும் கொண்டது.

பொலநறுவை -மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள இப் பாலத்திற்கான நிம்மாணப் பணிகள் 2007 நவம்பர் 17 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்டதுடன் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன இணைந்து நிர்மாணப் பணிகளை மேற்கொண்டிருந்தன.

பெருந்தெருக்கள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய இப்பாலத்திற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஓட்டமாவடி பாலம் பிரமாண்டமான முறையில் நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் உபயோகத்துக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபயுடன் அமைச்சர்கள் அமீர்அலி, முரளிதரன், வேட்பாளர்களான அலி சாஹிர் மௌலானா, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் மற்றும் ஐ.ம.சு.மு. முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)


# தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
## அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

2

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

X

*அன்பான தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்களே!*

இதுவரை காலமும் தமிழ் தேசியக்கூட்டமைப்போடு இருந்து தமிழ்த் தேசியத்திற்கான நேர்மையான பணியினை மேற்கொண்டு வந்தேன். 2009 மே 18ஆம் திகதிக்கு பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தான் உருவாக்கம் பெற்ற அடிப்படைக் கொள்கைகளில் இருந்து விலகி தமிழ்த் தேசியத்தினை பின்னடையச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடத்தொடங்கியது. அதனை கடுமையாக எதிர்த்து அதனை அடிப்படைக் கொள்கைகளின் வழியே பயணிக்க வைப்பதற்காகப் போராடினேன்.

அது முடியாமல் போகவே அதில் இருந்து வெளியேறி தமிழ்த் தேசியத்தினை பாதுகாக்கும் தேசியப்பற்று மிக்கவர்களை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் அதனை செயற்படுத்தி அதனை மக்கள் இயக்கமாக கட்டியெழுப்பும் முழுமுயற்சியில் ஈடுபட்டுவருகின்றேன்.

எனது பணிக்கு தங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன். தங்களை நேரில் சந்திக்க வேண்டும் என எண்ணிய போதும் உங்களில் சிலரை என்னால் நேரில் சந்திக்க முடியவில்லை எனவே தான் இக்கடிதம் மூலமாக உங்களைச் சந்திக்கின்றேன். எமக்கு பேராதரவு தந்து தமிழ்த்தேசியத்தை பாதுகாக்க முன்வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

என்றும் சேவையில்,
உங்கள்
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

# இலட்சியப் பாதையில் நிலமும் புலமும்

## தாயகம், தேசியம், சுயநிர்ணயம்

## தமிழ்த்தேச நிலைப்பாடு சமரசத்திற்கு அப்பாற்பட்டது

## தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களுக்கே எங்கள் ஆதரவு



Dr. கந்தசாமி
திருலோக மூர்த்தி
இல 1



கஜேந்திரகுமார்
காங்கேசர் பொன்னம்பலம்
இல 2



நடேசு
துரைராஜா
இல 3



நாகலிங்கம்
குழந்தைவேலு
இல 4




சின்னத்துரை
வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)
இல 10



பத்மினி
சிதம்பரநாதன்
இல 5



பிரான்சிஸ்
வின்சென்ட் போல்
இல 6



கலாநிதி கென்னடி
விஜயரட்ணம்
இல 7



விஸ்வலிங்கம்
மணிவண்ணன்
இல 8



சந்தனம்
ஸ்ரீபன்
இல 9




செல்லத்துரை
சுப்பிரமணியம்
இல 11



செல்வராசா
கஜேந்திரன்
இல 12

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



X

## இலட்சியப் பயணத்தில் நிலமும் புலமும் ஒரே பாதையில் பயணிக்க சைக்கிள் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுவீடன் தமிழ்ப் பெண்கள் அமைப்பு
மகளிர் அமைப்பு - யேர்மனி
நெதர்லாந்து தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பு
டென்மார்க் தமிழர் பேரவை
தமிழ் ஒன்றியம் இத்தாலி
தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு - பிரான்ஸ்
ஐக்கிய தமிழர் செயற்பாட்டுக் குழு - பிரித்தானியா
சுவிஸ் தமிழர் பேரவை
தமிழ் இளையோர் அமைப்பு - பெல்ஜியம்

(வி-5054)

# வன்னி மாவட்ட அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்

## தொழிற்சங்க கூட்டமைப்பு

(கொழும்பு)

வன்னி மாவட்ட அரசாங்க ஊழியர்கள் எதிர்நோக்கி வரும் சம்பளப்பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என தொழில் சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையில் வன்னி மாவட்ட அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வித சம்பள உயர்வுகளோ அல்லது ஏனைய கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்துள்ளமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் வடக்குப் பிரதேச அரசாங்க ஊழியர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவேண்டும் என தொழில் சங்க கூட்டமைப்பின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடக்கில் பல்வேறு துறைகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# ஐந்து அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பான் நிதியுதவி-நிதியமைச்சு தகவல்

(கொழும்பு)

ஐந்து அபிவிருத்தி திட்டங்களுக்கு ஜப்பான் அரசாங்கம் 48 இலட்சத்து 730 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு நிதியுதவியாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவி வழங்கல் எனும் வேலைத்திட்டத்தின் கீழேயே இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

ஜப்பான் இலங்கைக்கு வருடாந்தம் நிதியுதவியை வழங்கி வருகின்றது. இம்முறை 40 ஆவது தடவையாகவே இந்த நிதியுதவி வழங்கப்படவிருக்கின்றது.

இலங்கைக்கு நிதியுதவி வழங்கப்பட்டாலும் அதற்கான நிர்வாகத்தை ஜய்க்கா நிறுவனமே மேற்கொள்ளும் என்றும் நிதியமைச்சு அறிவித்துள்ளது. (6)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவை

(கொழும்பு)

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று வருவதற்காக ரயில்வே திணைக்களம் விசேட ரயில் சேவைகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் இச்சேவைகள் எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை முதல் 18 ஆம் வரை இவ் விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளதாக ரயில்வே வணிக அத்தியட்சகர் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஓ)


## மாபெரும் மலிவு விற்பனை

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு...**

**01.04.2010 - 10.04.2010 வரை**

உயர்தரமான இறக்குமதி செய்யப்பட்ட தரை ஓடுகள் (Tiles), சுவர் ஓடுகள் மற்றும் அனைத்து விதமான குளியலறை சாதனங்கள் அனைத்தையும் **40% விலைக் கழிவுடன்** பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்,

**TPS சர்வதேச தனியார் நிறுவனம்,**
**மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.**

T.P.:0775702253, 0777578277

(991)


# சிறு விளம்பரங்கள்


## முகாமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ள சர்வதேச DS.Max நிறுவனத்திற்கு Supervisor, Assistant Manager, Manager ஆகிய பதவிகளுக்கு ஆண்கள் தேவை. வயதெல்லை 18-30. அனுபவம் தேவையில்லை. கல்வித்தகமை:- G.C.E.O/L

தொடர்புக்கு:- 021 4900001, 021 4905001, 021 490 0350.

## தேவை

நெல்லியடியில் பிரதான வீதியில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட சகல வசதிகளுடன் வீடு ஒன்று அலுவலக உபயோகத்துக்குத் தேவை.

தொடர்புக்கு :- 0214901464 0778113952.

(சி/4967)

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அம்பலவாணர் வீதி அத்தியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 2 பரப்புக்காணியுடன் கூடிய கல் வீடு சகல வசதிகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 021 222 7956. (1109)


## வாடகைக்கு

இல.187, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள புத்தம் புதிய இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. N.G.O, ஹொட்டல் உல்லாச விடுதி, மெடிகிளினிக், வியாபார நிலையம் போன்றவற்றிற்கு உகந்தது. (1114)

தொடர்புக்கு :- 0727768835




# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் – 2010




1 Dr.கந்தசாமி திருலோகமூர்த்தி



2 கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்



3 நடேசு துரைராஜா



4 நாகலிங்கம் குழந்தைவேலு



5 பத்மினி சிதம்பரநாதன்



9 சந்தனம் ஸ்ரீபன்

## தீர விசாரித்து உண்மையை அறியுங்கள்,செயற்படுங்கள்

கூட்டமைப்பு பிளவுண்டது பற்றித் தமிழ் மக்கள் கவலையடைந்துள்ளார்கள், குழப்பமடைந்துள்ளார்கள். கூட்டமைப்பின் தலைவர்கள் மூவர்தான் இதற்குக் காரணம், பொறுப்பு. கட்சிக்குள் இவர்களது நடத்தை இந்தப் பிளவுக்கு வழிவகுத்திருக்கின்றது.

01. கட்சியிலுள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களை மதித்து அவர்களுடன் கலந்துரையாடுகின்ற ஜனநாயகப் பண்பை இவர்கள் கொண்டிருக்கவில்லை. உண்மையில் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மட்டுமல்ல மக்களுடனும் ஜனநாயகப் பண்பு கொண்ட நல்ல கலந்துரையாடல்களை நடத்தியிருக்க வேண்டும். அதுவும் நடைபெறவில்லை.

- இதற்கு அவர்களின் குறுகிய சுயநலம் காரணமாக இருக்கலாம். அல்லது,
- அவர்களின் இயலாமை / ஆற்றலின்மை காரணமாக இருக்கலாம்.

(இவர்கள் நீண்ட காலம் அரசியலில் இருந்தாலும் குறிப்பிடத்தக்க நன்மையான காரியங்களைத் தமிழ் மக்களுக்கு ஆற்றியவரல்லர். அதனால் இவர்கள் தோல்வியடைந்த அரசியல்வாதிகள் ஆகின்றனர். - Failed Politicians)

ஜனநாயக மறுப்புக் காரணமாக நல்ல கலந்துரையாடல்கள் நடக்காமையால் காலத்துக்கேற்ற உபாயங்களைக் கூட்டமைப்பில் வகுக்க முடியாமல் போயிற்று.


02. எதற்கும் இந்தியாவை எதிர்பார்த்திருக்கும் இவர்களின் சுயமற்ற தன்மை, இதன் காரணமாகக் கொள்கையைக் கைவிட்டு இரகசியத் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனர். கட்சியின் கொள்கையில் உறுதியாக நிற்கக் கூடியவர்களை கட்சியை விட்டு விலக்கினர். இந்த முடிவைக் கூட எதேச்சதிகாரமாக எடுத்தனர். விலக்கியவர்களுடன் ஒருமுறை கூட விலக்குவது பற்றிப் பேசியதில்லை. உண்மையில் பிரச்சினை இருந்திருந்தால் கலந்து பேசி தீர்க்க முயற்சித்திருக்கலாம். அவ்வாறு பிரச்சினை இருந்திருந்தால் அதைத் தீர்க்கத் துளியளவு முயற்சி கூட எடுக்கவில்லை. அவ்வாறு பிரச்சினை இருந்து கட்சிக்குள் தீர்க்க முடியாவிட்டால் சமூகப் பெரியவர்களுக்குத் தெரிவித்திருக்கலாம். பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருக்கலாம். சமூகத்தின் தலையீட்டைக் கோரியிருக்கலாம். அவ்வாறு எதுவும் செய்யாமல் தங்கள் பாட்டில் எதேச்சதிகாரமாகக் கூட்டமைப்பைப் பிளக்கும் முடிவை எடுத்திருக்கின்றார்கள்.

இந்தக் காரியம் வேண்டும் என்றே செய்யப்பட்ட அநியாயம். வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் செய்யப்பட்ட காரியம். இன்று மக்களுக்குப் பொய் சொல்லப்படுகின்றது, மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிகள் நடக்கின்றது.

மக்கள் இவற்றைத் தீர விசாரிக்க வேண்டும். "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித் தறிவதே மெய்" என்பது நமக்கு முன்னோர் கற்றுத் தந்த பாடம்.

தீர விசாரித்துச் செயற்படுங்கள். பொய்களையும், புனைகதைகளையும் நம்பி ஏமாறாதீர்கள். பொய்களையும் புனைவுகளையும் நம்பிச் செயற்படுவது தமிழ்ச் சமூகத்தை எதிர்காலத்தில் சீரழித்து விடும் ஆபத்து உண்டு. மீட்டெடுக்க முடியாதளவுக்குத் தமிழ்ச் சமூகம் ஆபத்தில் சிக்கி விடும்.


எனவே கவனம் ! விழித்துக் கொள்ளுங்கள்!
தீர விசாரித்து உண்மையை அறியுங்கள். செயற்படுங்கள்.
தீர விசாரித்து உண்மையை அறியுங்கள். செயற்படுங்கள்.
தீர விசாரித்து உண்மையை அறியுங்கள். செயற்படுங்கள்.




6 பிரான்ஸிஸ் வின்சென்ட் போல்



10 சின்னத்துரை வரதராஜன்




7 கலாநிதி கென்னடி விஜயரட்ணம்



11 செல்லத்துரை சுப்பிரமணியம்



8 விஸ்வலிங்கம் மணிவண்ணன்



12 செல்வராசா கஜேந்திரன்

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

X

(C-5052)

# எம் கண்ணீர் எல்லாம் அவர் துடைத்தருள்வார்

## யாழ். ஆயரின் உயிர்ப்பு விழாச் செய்தி

முப்பது வருட காலமாக நடந்த போரில் துன்பியல் வாழ்வு முடிந்து அமைதியின் காற்றை சுவாசிக்கின்றோம். இராணுவ கெடுபிடிகள் ஓய்ந்து மக்கள் சுதந்திரமாக நடமாட பயணம் செய்ய முடிகின்றது. தெற்கில் இருந்தும் எண்ணற்ற மக்கள் நாள்தோறும் யாழ்ப்பாணப் பிரதேசத்தை தரிசித்து மீண்டும் தமது உறவுகளைப் புதுப்பித்துக் கொள்கின்றார்கள். இந்நிலையில் தான் நாம் கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பை நினைவு கூரும் பாஸ்கா விழாவை எதிர்கொண்டுள்ளோம்.

மறுபுறமாக போர் ஓய்ந்தாலும் இதனால் பாதிக்கப்பட்ட மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்களுடைய துன்பங்கள் இன்னும் ஓயவில்லை. எண்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட வன்னி அகதி முகாம்களிலே துயர வாழ்வை எதிர்கொண்டுள்ளனர். எப்போது வீடு திரும்புவோம் என்ற அங்கலாய்ப்போடு அவர்கள் நாட்களை கழிக்கின்றனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு வடமராட்சி பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், இன்னல்கள் , சிலுவைகளில் நாமும் பங்குகொள்ள முயல்வோம்.

இந்நிலையிலும் மீண்டும் ஒரு முக்கிய தேர்தலை நாம் எதிர்கொள்கின்றோம். பாராளுமன்றத் தேர்தல் என்ற வகையில் முன்னைய தேர்தல்களை விட முக்கியமானதும் தேவையானதுமாக இது அமைகின்றது. இத் தேர்தலில் வெற்றிபெற ஆளும் கட்சியும் மற்றவர்களும் பலமான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இத் தேர்தலில் பெரும் எண்ணிக்கையில் வேட்பாளர்கள் போட்டியிடுவது வாக்காளர்களுக்கு பெரும் குழப்பத்தையும் சலிப்பையும் தருவதாக அமைகின்றது. இருப்பினும் தமிழ் மக்கள் முன்னைய தேர்தல்களைப் போல இத் தேர்தலிலும் ஏனோதானோ என்ற மன நிலையோடு நடந்து கொள்ளாது தமது விடிவை நிர்ணயிக்கும் முக்கியமான தேர்தல் எனச் சிந்தித்து, போதிய கவனம் செலுத்தி தமது அரிய வாக்குகளை சீரிய முறையில் பயன்படுத்தி தமது எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்ள முன் வரவேண்டுமென விநயமாக வேண்டிநிற்கின்றோம். இதுவே இன்று சீரியமுறையில் சிந்திக்கும் அனைத்து தமிழ் மக்களுடைய விருப்பமுமாகும்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் அதிக பலனைக் கொடுக்கும். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வின் ஊற்றாக விளங்குகிறது. உயிர்ப்பு ஞாயிறு திருவிழாவும் இதனையே உணர்த்துகிறது. எமது



துன்பங்கள் முடிவுறும். எம் கண்ணீர் எல்லாம் அவர் துடைத்தருள்வார். மனிதம் மீண்டும் சிறப்புறும் .இதுவே உயிர்த்த ஞாயிறு எமக்கு விடுக்கும் நற்செய்தி.

*அனைவருக்கும் எமது உயிர்த்த யேசுவின்அன்புமிகு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.*

அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர்


## அறிவித்தல்

கோப்பாயில் வசிக்கும் அன்னை தெரெசா மடக் கன்னியர்கள் அல்லது அன்பு பரப்பு சபை கன்னியர்கள் என அழைக்கப்படும் நாங்கள் எங்கள் பெயரிலோ அல்லது அனாதைகள் ஏழைகளின் பெயரிலோ நன்கொடை வசூலிக்க யாரையும் அனுப்பவில்லை, அனுப்புவதுமில்லை. எனவே எங்கள் பெயரில் யார் வந்தாலும் எந்த உதவியும் செய்ய வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். அப்படி யாராவது வசூலித்தால் அருகில் உள்ள பொலிஸ்நிலையத்தில் புகார் கொடுக்கவும்.

அன்னை தெரெசா
மடக்கன்னியர்கள்,
(இ) கோப்பாய்.


# மாணவர்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோள்

## மே 10 இல் விண்ணிற்கு ஏவப்படவுள்ளது

(பெங்களூர்)

ஐதராபாத் பொறியியல் கல்லூரி மாணவர்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ள ' ஸ்டட்சாட்' செயற்கைக்கோள் மே மாதம் 10 ஆம்திகதி விண்ணிற்கு ஏவப்படவுள்ளது.

பெங்களூர், ஐதராபாத்தைச் சேர்ந்த 7 பொறியியல் கல்லூரிகளின்கூட்டுமுயற்சியில் மாணவர்கள் பயன் பெறுவதற்காக ' ஸ்டட்சாட்' என்றசெயற்கைக்கோளை இஸ்ரோ தயாரித்துள்ளது.

இதற்கான, செயற்கைக்கோள் தகவல் பரிமாற்ற மையம் (நாஸ்ட்ராக்) நிட்டே மீனாட்சி தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதை இஸ்ரோ தலைவர் கே.ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

பூமியைச் சுற்றி வரும் 250 வர்த்தக செயற்கைக் கோள்களுடன் இந்த மையம் தக்வல்களைப் பரிமாறிக்கொள்ளும் திறன் கொண்டது.

மேலும், மற்ற செயற்கைக் கோள்கள் அனுப்பும் தகவல்களை, " ஸ்டட்சாட்" குழுவினர் பெற்றுக்கொள்ளவும் இந்த மையம் உதவும். உலகின் மிகப் பெரிய கண்காணிப்பு மையமான நாசா சர்வதேச விண்வெளி நிலையத்துடனும் நாட்ஸ்ட்ராக் தொடர்பு கொள்ள முடியும்.

இந்த செயற்கைக்கோளில் 90 மீற்றர் தூரத்தில் உள்ள பொருட்களை தெளிவாக படம் பிடிக்கும் திறன் கொண்ட கமரா பொருத்தப்பட்டுள்ளது. (6)




7

கிருஷ்ணபிள்ளை
ஸ்ரீ சரவணபவான்
சட்டத்தரணி

இலங்கையை ஆசியாவின் அதிசயம் ஆக்குவோம்

வளமான வாழ்வுக்கு சமாதான சக வாழ்வு

(சி-5042)

பொதுத் தேர்தல்–2010
தேர்தல் மாவட்டம்–யாழ்ப்பாணம்



## மனமுவந்த நன்றிகள்

திருமதி ப.கோமதி ஆகிய நான் யா/போதனா வைத்தியசாலை இதய சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்ற நாட்களிலும், தொடர்ந்து மாதாந்த வைத்திய பரிசோதனைகளின் (Clinic) போதும் ஆலோசனைகள் வழங்குகின்ற இதய சிகிச்சை நிபுணர் திரு.லக்ஸ்மன் அவர்கட்கும் மற்றும் விடுதி உத்தியோகத்தர்கட்கும், ஆய்வுகூட உத்தியோகத்தர்கள், தாதிமார் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் அனைவருக்கும் எனதும் குடும்பத்தினரதும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நோயாளி திருமதி ப.கோமதியும்
குடும்பத்தினரும்
(1115)



## குழுப்படம் எடுத்தல்
## (பட்டப்பின் கல்வி டிப்ளோமா 2006/2008)

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர கற்கைநெறியை பூர்த்தி செய்த 2006/2008 கல்வியாண்டு மாணவர்களின் குழுப்படம் எடுக்கும்நிகழ்வு 10.04.2010 (சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளமையால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வகுப்புப் பிரதிநிதி
0773144505
(C-4968)


# அமைச்சர் பதியுதீனின் அலுவலகம் மீது தாக்குதல்

(கொழும்பு)

மன்னார் உப்புக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அமைச்சர் றிஷாட் பதியுதீனின் அலுவலகம் நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் நூர்தீன் மசூரின் ஆதரவாளர்களால் உடைக்கப்பட்டுள்ளது. இதனால் நேற்று முன்தினம் மன்னார் உப்புக்குளம் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து உப்புக்குளம் பகுதியில் நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டனர். அப்பகுதியில் றிஷாட் பதியுதீனின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றபோது, பொலிஸார் அவர்களைக் கலைந்து போகு மாறு பணித்தனர்.

அச்சமயம் சம்பவ இடத்திற்கு வந்த மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன், ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டவர்களை உடன் கைது செய்யுமாறு உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு புலப்படுத்தப்பட்டுள்ளது. (6)


## நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்



போயிட்டி ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலயத் துக்கு ஒலிபெருக்கி சாதனத்தை அன்பளிப்புச் செய்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் K.N. டக்ளஸ்தேவானந்தா அவர்களுக்கும்



தோழர் உதயன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

போயிட்டி நீர்வேலி,
வினோபாஜி.

ஸ்ரீ மாணிக்க பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையும்,
உபயகாரர்களும். (1112)



## பாராளுமன்றப் பொதுத் தேர்தல்–2010

நீண்டகாலமாக எல்லாக்கட்சியினரிடமும் நாங்கள் இரந்து கேட்டுக் களைத்த கோரிக்கையாகிய மிருசுவில் படித்த மகளிர் திட்ட பஸ்சேவையை, நாம் கேட்டவுடனே அதுவும் தேர்தலுக்கு முன் கூட்டியே செய்து காட்டிய செயல் வீரராகிய தென்மராட்சி ஈ.பி.டி.பி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளராகிய தோழர் சார்ள்ஸ் அவர்களுக்கே எமது வாக்குகள்.

| 4 | 9 | 3 |
| --- | --- | --- |
| அலெக்ஸாண்டர் ஆசைமுத்து (தோழர் சார்ள்ஸ்) (தென்மராட்சி வலய அமைப்பாளர்) | கே.என்.டக்ளஸ் தேவானந்தா | ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (தோழர் ரங்கன்) |

தபசிகுளம், மிருசுவில், உசன், விடத்தற்பளை, எழுதுமட்டுவாழ் வடக்கு, வேளாபள்ளம், மிருசுவில் படித்தமகளிர் திட்ட வாழ் பொதுமக்கள்.

(1005)

வீட்டின் பெயரோ அன்னை இல்லம்.
அன்னை இருப்பதோ அநாதை இல்லம்.
~ முனைவர் உலகநாயகி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எனது அருமை வேட்பாளப் பெருமக்களே! அன்னை தமிழ்மீது சத்தியம் செய்யுங்கள்

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் நான்கு நாட்களே பாக்கியாக இருக்கும் இவ் வேளையில் தேர்தல் பிரசாரம் உச்சமடைந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சிகளும், சுயேட்சைக்குழுக்களும் வாக்குகளைச் சேகரிக்கும் பணியில் அதிவேகமாக ஈடுபட்டுள்ளன.

எவ்வாறாயினும் 8ஆம் திகதி தேர்தல் முடிவடைந்துவிடும். அதன் பின்னர் வென்றவர்கள், தோற்றவர்கள் என்ற பிரிவினர்களோடு, சுனாமி வேகத்தில் அடித்த தேர்தல் அலை அமைதி கொள்ளும்.

தேர்தல் அலையின் அமைதியோடு எங்கள் பிரச்சினையும் அமைதியாகிப் போகும் அபாயம் இருப்பதை உணரமுடிகின்றது.

இங்குதான் தமிழ்த் தலைமைகள் விழிப்பாகவும், புத்திசாதுரியமாகவும் செயலாற்ற வேண்டிய தேவை உண்டு.

தேர்தலில் அலைந்து திரிந்த அலுப்பைப் போக்க நினைத்தால் எல்லாமே பாழாகிவிடும்.

எனவே தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக எந்தளவு தூரம் இராப்பகலாகப் பாடுபட்டீர்களோ அதைவிட பலமடங்கு வேகத்தில்-உற்சாகத்தில் உங்கள் உழைப்பு இருக்கும் போதுதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

அன்புக்குரிய வேட்பாளப் பெருமக்களே!

நீங்கள் 324பேர். எல்லோருமே இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி பேசுகின்றீர்கள். இதில் உண்மையாக-விசுவாசமாக-இனப்பற்றோடு பேசுபவர்கள் யார் என்ற உண்மை உங்களுக்கு மட்டுமே தெரியும்.

அதுபற்றி அப்பாவித் தமிழ் மக்கள் அறியார்கள். அவர்கள் அறியவும் விரும்பவில்லை. ஏன் என்றா கேட்கிறீர்கள்.

ஈழத் தமிழர்கள் நெப்போலியன் போல் ஐந்து தடவைகள் தோற்று ஆறாவது தடவையில் வெல்லலாம் என்ற நம்பிக்கையில் இருப்பவர்கள் அல்ல.

காலாகாலமாகத் தோல்வி.

அகிம்சையில்-ஆயுதத்தில்-சமாதானப் பேச்சுவார்த்தையில்-உலக நாடுகள் உதவும் என்ற நம்பிக்கையில்-எங்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றவர்கள் எங்களுக்காகப் பேசுவார்கள் என்ற நினைப்பில்-ஆண்டவா! ஒன்றா, இரண்டா... எல்லாம் வெற்றும் வெறுதுமாகிப் போன பின்பு 324 பேரென்ன மூவாயிரம் பேராக இருந்தாலும்... எங்கள் மனங்கள் துன்பத்தில் தோய்ந்து இழந்துபோன உறவுகளின் ஆத்ம சாந்திக்காக மௌனமாய்ப் பிரார்த்திப்பதில் மட்டுமே...

என்னருமை வேட்பாளப் பெருமக்களே!

உங்கள் இதயங்களைத் தொடுங்கள்.

உங்கள் தாய் மீது சத்தியம் செய்யுங்கள். அன்னை தமிழுக்கு-நொந்துபோய் பரிதவிக்கும் உங்கள் உடன் பிறப்புகளுக்கு மனதாலும் தீங்கிழைக்க மாட்டோம் என்று உறுதி உரை செய்யுங்கள்.

தேர்தலில் வென்று ஆறாவது திருத்தச் சட்டமூலத்தில் சத்தியம் செய்யமுன் இதனைச் செய்யுங்கள். இது மிகவும் அவசியம்.

# நேபாளத்தில் கடவுச்சீட்டு வழங்கல் நிறுத்தி வைப்பு

## ஆயிரக்கணக்கானோர் தவிப்பு

கையினால் எழுதி அளிக்கப்படும் பாஸ்போர்ட் விநியோகத்தை நேபாள அரசு நிறுத்திவைத்துள்ளது. இதனால் அந் நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்காகச் செல்ல காத்திருக்கும் ஆயிரக்கணக்கானோர் பரிதவித்துள்ளனர்.

இயந்திரங்களால் சோதிக்கும் பாஸ்போர்ட் தயாரிப்பு பணி இன்னும் நிறைவடையவில்லை. இதனால் பாஸ்போர்ட் வழங்குவதில் தாமதம் ஏற்படும். ஆனால் கையால் எழுதி அளிக்கும் பாஸ்போர்ட் இனிமேல் விநியோகிக்கப்படாது என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

போலி பாஸ்போர்ட்டுகளை தடுப்பதற்காக இயந்திரங்கள் மூலம் சோதனை செய்யக்கூடிய பாஸ்போர்ட்களை வழங்க நேபாள அரசு முடிவெடுத்தது. இதையடுத்து இயந்திரங்கள் மூலம் சோதனை செய்யும் பாஸ்போர்ட் தயாரிக்கும் பணி இந்திய அரசுக்கு சொந்தமான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பாஸ்பேர்ட் தயாரிக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே கையால் எழுதி அளிக்கும் பாஸ்போர்ட் விநியோகத்தையும் நிறுத்திவைக்க நேபாள அரசு முடிவெடுத்துள்ளது. அரசின் இந்த முடிவு வெளிநாடு களுக்கு வேலைக்கு செல்வதற்காக பாஸ்போர்ட்டுகளுக்கு விண்ணப்பித்து காத்திருப்போரை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது. அவர்கள் தங்களது வேதனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

நேபாள அரசின் இந்த முடிவுக்கு வெளிநாடுகளுக்கு வேலைக்கு தொழிலாளர்களை அனுப்பி வைக்கும் அந்நாட்டு ஏஜென்ஸிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அரசின் இந்த செயலால் நாட்டின் மீது தவறான அபிப்ராயம் ஏற்படும் என்று வெளிநாடுகளுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் அந்நாட்டு ஏஜென்ஸிகள் கூட்டமைப்பின் தலைவர் திலக் ராணாபத் தெரிவித்தார். (ஓ-6)

### மனித உரிமை விவகாரம் தொடர்பில்

# டேவிட் மில்லிபாண்ட்டின் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையே

## ஜே.வி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லி பாண்ட் அண்மையில் இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் வெளி யிட்ட கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவையே என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

குறிப்பாக எதிர்க்கட்சிகளின் பொது வேட் பாளராக போட்டியிட்ட ஜெனரல் சரத் பொன் சேகா நடத்தப்படும் விதம் தொடர்பில் மில்லி பாண்ட் வெளியிட்ட கருத்துக்கள் மெத்தச் சரி என ஜனநாயக தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித் துள்ளார்.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி ஜெனரல் சரத் பொன்சேகாவை கைது செய்து ஒரு மாதத்திற்கும் அதிகமான காலம் அரசாங்கம் தடுத்து வைத்திருந்தாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கையின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் இது ஓர் மனித உரிமை மீறல் செயலாகும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் மற்றும் ஜெனரல் பொன்சேகா கைது செய்யப் பட்ட சம்பவம் ஆகியவற்றை மனித உரிமை மீறல்களாகவே கருதப்பட வேண்டும் எனவும் டேவிட் மில்லி பாண்டின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வ தாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் டேவிட் மில்லிபாண்ட் வெளியிட்டுள்ள கருத்துக் களை தாம் இங்கு சுட்டிக்காட்டவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் காரணங்களின் அடிப்படை யில் காணாமல் போதல் சம்பவங்கள் உள் ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சி யாக இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித் துள்ளார். அடக்குமுறைகள் அச்சுறுத்தல்கள் மற் றும் காணாமல் போதல் சம்பவங்கள் தற் போது இயல்பு வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாற்றமடைந்துள்ளதென அவர் குறிப்பிட் டுள்ளார். யுத்த வீரர் ஒருவருக்கு அரசாங்கம் அளிக்கும் மரியாதையை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்களுக்கு எவ்வாறான நிலை நேரும் என்பதனை மதிப்பிட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

## சிறுவர் முகாம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புன்னா லைக் கட்டுவன் ம.வி. பாடசாலை மண்டபத்தில் சிறுவர் முகாம் நடைபெறவுள்ளது. இதில் இப்பாடசாலையைச் சேர்ந்த 31 சிறுவர்களும் ஈவினை அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த 19 சிறுவர்களும் பங்கு பற்றவுள்ளனர். (ஓ)

# கண்டோம் -நம்பினோம்

## பரமபிதா காட்டிய பாதை



அருளுடையவராக வாழ்கின்றவர்க்குத் துன்பம் இல்லை, காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவார்.

ஆம், இது அறிவியல் உலகம். எதையும் ஆய்ந்து அறிய வேண்டும். ஆனால் ,மனிதனின் பிறப்பு, நோய், துன்பம் இறப்பு இவைகளுக்கு என்ன காரணம்? இவைகளைச் சிந்திப்பது தான் தத்துவங்கள். ஆனால், இத்தத்துவங்களால் கூட மனித வாழ்வின் உண்மைகளுக்குச் சரியான விடை கொடுக்க முடியவில்லை. அதனால் தான் பல தத்துவங்களும் பலதத்துவ ஞானிகளும் தோன்றினர். இதில் சில தத்துவங்கள் துன்பத்திற்கும் தீமைகளுக்கும் என்ன காரணம் என்று கண்டுபிடித்துக் கூறின. அவை இயற்கைச் சீற்றங்கள், மனிதனின் தீயசெயல்கள் மற்றும் விலங்கினங்கள் என்றன. வேறு சில தத்துவங்கள் முற்பிறவி செயல்களே துன்பத்துக்குக் காரணம் என்றன.

ஆம், இன்று இயேசுவின் உயிர்ப்பின் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். நமது ஆண்டவர் உயிர்த்து விட்டார் என்பதை எப்படி அறிய முடியும்? அறிவியல் கொண்டு ஆய்வுக்கூடத்தில் நிரூபிக்க முடியுமா? அல்லது தத்துவங்களைக் கொண்டு நிரூபிக்க முடியுமா?

இல்லை, நம்பிக்கை ஒன்றினாலே நிரூபிக்க முடியும். அதுவும் அருள் கண்கொண்டே நிரூபிக்க முடியும்.


ஆம், இன்றைய நற்செய்தியில் வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் இயேசுவால் அதிகம் அன்பு செய்யப்பட்ட மதகலா மரியாள் இயேசுவின் மேல் உள்ள அன்பினால் அவர் புதைக்கப்பட்ட இடத்தைப் பார்க்க கல்லறைக்குச் சென்றாள். ஆனால், சென்றவர்களுக்கு அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. ஆம், இயேசு புதைக்கப்பட்ட கல்லறை காலியாக கிடந்தது. இதை மற்ற திருத்தூதர்களுக்கும் ஓடிச் சென்று சொல்கிறாள். முதலில் பார்த்தவர் யேசுவினால் அதிகம் அன்பு செய்யப்பட்ட யோவான். இரண்டாவதாக திருத்தூதர் தோமா, இவரும் உயிர்த்த இயேசுவை தனது அருள்க் கண்ணால் கண்டார்.

ஆம், நமக்கும் இந்த அருள்கண் வேண்டும். அப்போது தான் நாமும் உயிர்த்த ஆண்டவரைப் சந்திப்போம்.

எனவே, நமது ஆண்டவர் வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்தார். நமக்கும் உயிர்ப்பு உண்டென விளங்கச் செய்தார். அந்த உயிர்த்த ஆண்டவரை அன்றாடம் நாம் சந்திக்கும் ஏழை எளிய மக்கள், அனாதைகள், கைவிடப்பட்டோர், உடல் நலம் குன்றியவர்கள் மூலமும் அன்றாட வாழ்க்கை ,அனுபவங்கள் நிகழ்வுகள் வழியாகவும் சந்திப்போம். இன்று நாமும் நமது உயிர்த்த ஆண்டவரை இப்படிப்பட்ட அழகில்லாத ,அறிமுகமில்லாத, அடையாளம் தெரியாத, முக வரி இழந்த மக்களின் நம்பிக்கை ஒளியில் காண்போம். அதற்கு அவன் வருளே நமக்குத் துணை புரியட்டும்.

ஜோன் ரொபேர்ட்

# பாராளுமன்றத் தேர்தல் 2010




என் அன்புள்ளம் கொண்ட வடபகுதி வாழ் விவசாயப் பெருமக்களுக்கு,

வடபகுதிப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து, போர்க்காலத்தில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்த உங்கள் வாழ்வை வளமாக்க பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் திட்டமிட்டுள்ளோம்.

- வடபகுதி வாழ் விவசாயிகளுக்கு தேவையான தண்ணீர் விநியோகத்தை மேம்படுத்த, மகாவலிகங்கை இரணைமடு குளத்துடன் இணைக்கப்பட்டு, அதனூடாக வட பகுதியை நோக்கி நிரந்தரமான நீர் விநியோகத் திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.
- வடபகுதி வாழ் விவசாயிகளுக்குத் தேவையான உர வகைகள், கிருமிநாசினிகள், விதையினங்கள், நவீன விவசாய உற்பத்தி உபகரணங்கள் மற்றும் விவசாயத்துக்குத் தேவையான அனைத்தையும் 2 வருட கால மானிய அடிப்படையிலான ஒப்பந்தத்தில் மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- வேறு பிரதேசங்களில் விவசாயிகளுக்காக அமுல்ப்படுத்தப்படும் சலுகைகள் யாவும தேர்தல் முடிந்த கையோடு வடபகுதியில் அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- வடபகுதி வாழ் விவசாயிகளினால் உற்பத்திசெய்யப்படும் பொருள்களை நியாயமான விலைவில் கொள்வனவு செய்வதற்கும், கூடிய விரைவில் அவற்றைச் சந்தைப்படுத்துவதற்குமான வாய்ப்புக்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களினூடாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- மத்திய வங்கியூடாக மிகக் குறைந்த வட்டி அடிப்படையில் 5 வருடத்துக்கு தேவையான நிதியை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.
- இன்னமும் விவசாயச் செய்கைகள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கும் எமது வளம்மிக்க பிரதேசங்களில் மீண்டும் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, அந்தப் பகுதிகளில் விவசாயம் செய்வதற்கு விசேட மானிய உதவிகள், கடன் வசதிகள் பெற்றுத்தரப்படும்.
- வடபகுதி மண்ணின் வளத்துக்கு ஏற்றவாறு பல வகையான பழ வகைகளின் உற்பத்திகளையும் பெருக்கி, பதப்படுத்துதல், பழச்சாறு, பழரச உற்பத்திகளை நவீனமயப்படுத்தி, அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு திட்டங்களை வகுத்தல்.

எதிர்வரும் 5 ஆண்டுகளையும் வட பகுதி வாழ் மக்களின் நன்மை கருதியும், எமது பிரதேச விவசாய சமூகத்தின் முன்னேற்றம் கருதியும், வெற்றிலைச் சின்னத்தக்குப் புள்ளடியிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு உங்கள் மூன்று விருப்பு வாக்குகளையும் அளித்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.



**9**

கௌரவ அமைச்சர்
கே.என். டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)



3
ஐயாத்துரை
ஸ்ரீரங்கேஸ்வரன்
(தோழர் ரங்கன்)
வடமராட்சி வலய
அமைப்பாளர்



4
அலெக்ஸாண்டர்
சூசைமுத்து
(தோழர் சார்ள்ஸ்)
தென்மராட்சி வலய
அமைப்பாளர்



6
கந்தசாமி
கமலேந்திரன்
(தோழர் கமல்)
தீவக வலய
அமைப்பாளர்



8
சந்திரகுமார்
முருகேசு
(தோழர் அசோக்)
முன்னாள்
பாராளுமன்ற
உறுப்பினர்



10
பசுபதி
சீவரட்ணம்
(தோழர் கி.பி -ஜீவா)
தேசிய
அமைப்பாளர்



11
முருகுப்பிள்ளை
சிறீபதி
முன்னாள்
ஹாட்லிக்
கல்லூரி அதிபர்



12
சில்வேஸ்த்திரி
அலென்ரின்
(தோழர் உதயன்)
யாழ் மாவட்ட
அமைப்பாளர்

(சி-5058)

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# முரளி விஜய் அதிரடி சதம்; சென்னை அணி சாதனை வெற்றி

## போராடிய ராஜஸ்தான் ஏமாற்றம்

முரளி விஜயின் அதிரடி சதத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று லீக் சுற்றின் 32ஆவது போட்டி சென்னையில் நடைபெற்றது.

இப் போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முரளி விஜயின் அதிரடி சதத்தின் மூலம் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 246 ஓட்டங்களைக்குவித்தது.

துடுப்பாட்டத்தில் முரளி விஜய் 56 பந்துகளில் (8 பவுண்டரிகள், 11 சிக்ஸர்கள் அடங்கலாக) 127 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் 34 பந்துகளில் (3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 62 ஓட்டங்களையும் மத்யூ ஹைடன் 34 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் ஷேன் வோட்சன் 2 விக்கெட்டுக்களையும் வோக், அணித்தலைவர் ஷேன் வோர்ன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நாமன் ஓஜா இறுதி வரை போராடியும் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 223 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் நாமன் ஓஜா ஆட்டமிழக்காமல் 55 பந்துகளில் (8 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 94 ஓட்டங்களையும் ஷேன் வோட்ஷன் 25 பந்துகளில் (5 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 60 ஓட்டங்களையும் லூம்ப் 26 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அல்பி மோர்கல், பொல்லிங்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் முரளிதரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த முரளி விஜய் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 9ஆவது போட்டியில் நான்காவது வெற்றியைப் பெற்று 8 புள்ளிகளுடன் நான்காம் இடத்திற்கு முன்னேறியது.

இதேவேளை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 9ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியைச் சந்தித்தது.

### சென்னை அணி சாதனை படைத்தது

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 246 ஓட்டங்களைக் குவித்தது.

இந்த ஓட்ட எண்ணிக்கையானது ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இன்னிங்ஸில் ஒன்றில் எடுக்கப்பட்ட அதிக ஓட்ட எண்ணிக்கையாகும்.

இதற்கு முன்னர் கடந்த 2008ஆம் ஆண்டில் ஐ.பி.எல். முதலாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் 6 விக்கெட்டுக்களையிழந்து 240 ஓட்டங்களை எடுத்தமையே இது வரை சாதனையாக இருந்தது.

இந்த தனது சாதனையை சென்னை சுப்பர்கிங்ஸ் அணி நேற்று முறியடித்து புதிய சாதனை படைத்தது.

இதேவேளை மூன்றாவது விக்கெட்டுக்காக முரளி விஜய்-அல்பி மோர்கல் ஜோடி 152 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து சாதனை படைத்தனர்.

## நாடாளுமன்ற...

அட்டைகள் கிடைக்காதவர்கள் தமது தபாலகங்களில் தேர்தல் தினமான 8ஆம் திகதி மாலை 3.00 மணி வரைபெற்று வாக்களிக்கலாம்.

அத்துடன் காங்கேசன்துறை வாக்கெடுப்புப் பிரிவிலுள்ள வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் 21-25, 33-38 வரையான வாக்கெடுப்பு நிலைய வாக்காளருக் கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் மருதனார் மடத்தில் இயங்கும் காங்கேசன்துறை தபாலகத்திலும் பருத்தித்துறை வாக்கெடுப்பு பிரிவு மாவட்ட இலக்கம் 36-43 வரையான வாக்கெடுப்பு நிலைய வாக்காளருக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் குடத்தனை உப தபாலகத்திலும் விநியோகிக்கப்படும்.

### போக்குவரத்து

யாழ். தேர்தல் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வருபவர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் அனைத்தும் வழங்கப்படும்.

இதில் இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்காக வவுனியா-கிளிநொச்சிக்கான ஒரு வழி போக்கு வரத்துக்காக 10 பேருந்துகளும் இரு வழிபோக்குவரத்துக்காக 30 சிற்றூர்திகளும் இராமாவில்-யாழ். மத்திய கல்லூரிக்கு இடையில் இரு வழி போக்குவரத்துக்காக 2 சிற்றூர்திகளும், இராமாவில்-குடத்தனைக்கான இரு வழி போக்குவரத்து சேவைக்கு 10 சிற்றூர்திகளும் குடத்தனை-இராமாவில் இருவழி போக்குவரத்துக்காக 2 சிற்றூர்திகளும் யாழ்ப்பாணம்-கிளிநொச்சிக்கான இரு வழி போக்குவரத்துக்காக 10 சிற்றூர்திகளும் பருத்தித்துறை-கிளிநொச்சிக்கான இருவழி போக்குவரத்துக்காக 3 சிற்றூர்திகளும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

வாக்கு எண்ணும் பணிக்காக 37 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் தினமான 8ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு தபால் மூல வாக்கு எண்ணும் பணிகளும் மாலை 6.30 மணிக்கு சாதாரண வாக்குகள் எண்ணும் பணிகளும் ஆரம்பமாகும்

### இடம் பெயர்ந்த வாக்காளர்

இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்கு பின்வரு மாறு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இராமாவில் நலன்புரி நிலையத்திலுள்ள வாக்காளர்களுக்கு குடத்தனைக்குச் செல்வதற்கும், யாழ். மாவட்டத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களுக்க கிளிநொச்சி செல்வதற்கும் வன்னி தேர்தல் மாவட்ட வாக்காளர்களுக்கு வவுனியா செல்வதற்கும் வவுனியாவில் உள்ள வாக்காளர்கள் கிளிநொச்சிவருவதற்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு செல்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

## பொன்சேகா...

போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஜே.வி.பி யின் ஆதரவுடன் புறக்கோட்டைப் பகுதியில் இந் தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமது கோரிக்கைகளை அரசு கேட்கும் வரையில் தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பௌத்த துற விகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## பொதுத் தேர்...

வினை சக்தி மயப்படுத்தி பொது யோசனைகளை முன்வைக்க முடியும் என்றும் கூறினார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவினால் சர்வகட்சிக் குழு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## பங்களாதேஷ்...

வத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு, புனர்நிர்மாண மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைப் பார்வையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

அத்துடன் அவர்கள் கிளிநொச்சியில் உள்ள இராணுவத்தினருடன் விசேட கலந்துரையாடலையும் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5,9,14)

## அனோமா...

இந்தக் கருத்து பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசு, எதிர்க்கட் சிகளை முடக்கும் செயற்பாடுகளை மேலும் தீவிரமாக்கப் போகின்றது என்பதை அமைச் சரின் கருத்து உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் அனோமா பொன்சேகாவைக் குறிவைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு அதனை மூன்றாம் தரப்பின் மீதுசுமத்த அரசு திட்டமிட்டுள்ளது என அது மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

# மும்பை அணிக்கு அரையிறுதி வாய்ப்பு

(மும்பை)

சகலதுறையிலும் ஜொலித்த மும்பை இந்தியன்ஸ் அணி 63 ஓட்டங்கள்வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிவாய்ப்பை உறுதிசெய்தது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று மும்பையில் நடைபெற்ற லீக் சுற்றின் 33ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நாயுடு ஆட்டமிழக்காமல் 29 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 55 ஓட்டங்களையும் திவாரி 35 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர் அடங்கலாக) 44 ஓட்டங்களையும் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 25 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரஜன் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் றியார் ஹரிஸ், சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 18.2 ஓவர்களில் 115 ஓட்டங்களை எடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்து 63 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் 21, அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 19, ஹேர்சர் கிப்ஸ் 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங், சகீர் கான், பொல்லார்ட், மக்லரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மலிங்க ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 8 போட்டிகளில் 7 ஆவது வெற்றியைப்பெற்று 14 புள்ளிகளுடன் முதலாவது அணியாக அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்தது.

இதேவேளை டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 8ஆவது போட்டியில் 5 ஆவது தோல்வியைச்சந்தித்தது.


பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
மக்கள் சின்னம் மெழுகுவர்த்தி

மக்களுக்காக உழைக்கும் தோழன்
உரிமைகளுக்காகப் போராடும்
தலைமைப் போராளி
ஸ்ரீதரனுக்கே உங்கள்
வாக்கு. மெழுகுதிரிக்கே
உங்கள் புள்ளடி
தி.ஸ்ரீதரன் (சுகு)
X 6
(8-5069)


பாராளுமன்றத் தேர்தல்-2010
தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
பிரான்சிஸ் வின்சென்டீபோல்
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர், பருத்தித்துறை நகரசபை முன்னாள் உப தலைவர், வடமராட்சி வடக்கு கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர்
பிரான்சிஸ் வின்சென்டீபோல்
அவர்களை பெருவெற்றி பெறச் செய்வோம்
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
X 6
வடமராட்சி மக்கள்
(8-5056)




# அமைச்சரின் வாகனம் மோதி...

ணுவ வாகனம் ஒன்று குறித்த வீதியால் பயணித்த கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏகாம்பரம் மகேசன் என்பவர் மீது மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்றபோது இராணுவ ஜீப் வாகனம் ஒன்று நேருக்கு நேர் மோதியநிலையிலேயே விரிவுரையாளர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அன்னாரது சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் நடைபெறவுள்ள அதே வேளை, நாளைய தினம் கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகத்தில் இரங்கல் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் கே.போகீந்தரன் தெரிவித்துள்ளார்.

(ச-5)

















இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.